# THE FUNDAMENTAL BASIS OF PRIMARY EDUCATION.

*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God. that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

"பஞ்சவிம்சதிபாக்கியம்"] ஸத்தியம் வத—SPEAK THE TRUTH. ["Our Jubilee Year."

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love : Knowledge is Power : *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 25.] பிங்கள௵ ஆடி௴, 1917௵ ஜூலை௴. [சஞ்சிகை 4.

## Business "Terms."

*N.B.*—To avoid all possibility of misapprehension, we *reiterate* our " terms" (approved by our constituents and by Government) which, from the beginning, are :—

1. Cash or Remittance with Order : Rs. 5 per Vol.; or,
2. *One month's credit at the arrears rate* : Rs. 6 per Vol.
3. Arrears to be cleared on rendering of *a/cs.* or by V.P.P.
4. All Indents registered for School Edition only and to begin with the current volume (corresponding with Tamil or Official year, April-March).
5. Subscriptions registered to continue from Vol. to Vol. and not to be discontinued †in the middle of a Vol.
6. No popular edition issued owing to scarcity of paper.
7. Monthly parts (spare or sample) 8 (eight) annas each.

## General Notice.

i. The *terms* offered are for regular subscribers only ;
ii. no exception to these rules can be made or recognised;
iii. short credit allowed should not be misused ;
iv. unpaid accounts are subject to "fluctuations" and overcharges ;
v. all arrears should be fully paid *within* three months (*time being an important factor.*) ;
vi. every outstanding account will be charged *One Rupee Extra* per Vol. or any part thereof for every notice or Reminder sent after this period;
vii. all subscribers are *ipso facto* bound to observe the rules.

(*By Order of the Managing Committee.*)

THE MANAGING AGENTS, "VIVEKACHINTAMANI," *Novr.* 1916.] *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*.

☞ *Calculations made are based on the principle of one copy for each school which should be strictly adhered to.*

†Notice of discontinuance to have effect must be given in time in writing before a New Volume begins in April and after all the arrears due to the end of the current Volume have been paid and account settled.

*N.B.*—Due care is taken in addressing and personally handing copies to the Post Office at Brodies' Road and there the publishers' responsibility ceases. Evidence of posting is preserved and can be made available for enquiries. The publishers do not undertake to replace missing copies but will endeavour to supply spare copies when available, on payment, if applied for within 30 days after the 15th of each month for which such copies are due.

Copies lost in transit, if promptly brought to notice, will be referred to the Postmaster-General direct who has written to say " that every effort will be made to trace them." "If you should have further cause for complaint of the loss or delay of articles, similarly posted or addressed " continues the same high authority, " I shall be glad if you will let me know *without delay*, giving me the fullest particulars possible." Addresses should invariably give the name of the post office and district to prevent miscarriage or non-delivery by post.

## THE FUNDAMENTAL BASIS OF PRIMARY EDUCATION.

In 1905 when the Director of Public Instruction, Madras, has promulgated his new Scheme of Primary Education and active steps were being taken for giving effect to the same, Mr. C. V. Swaminatha Aiyar called public attention to a series of three articles he wrdte in 1903 on "the Fundamental Principle of Primary Education" and to the fourth on "Character-Building," as the process of drawing out the innate tendency in man to evolve what is good in him is called in the West, laying stress on the fact that it should be the first and essential basis of all efforts at a national system of Primary Education. He pointed out, "that American Educators confess the errors of the past and are begining 20th century work with character-building as the basis." Indian Educators also admit "that the hope of the future of India lies in the moral regeneration of its people." And before a dozen years have elapsed, the Great War now raging in the West has opened the eyes of the British people and others that they were equally in error in the conception they have formed of the Ideal of Primary Education as actually carried out by them. It is a fundamental principle of all education that "moral regeneration" ought to be and is the only true and safe basis on which the future hope of any country should be built—if it is not to meet with disappointment and disaster at a grave crisis in the national life of the people. Primary Education to be a success must effect this. The Education of the coming man or citizen must be based on a moral basis, *i.e*, in drawing out the moral being that is in man. So far all are agreed. But when we look to the ways and means, men and methods to carry out this supreme need of the hour, we are confronted with so many differences, difficulties, varieties of opinions, methods and what not, that it is impossible for any one whether it be a *Commission* of Experts or a body of Educationists, to make anything out of the chaos of information regarding men, methods, resources, materials, etc., they may be able to collect together. For it is a Law of Nature to conform to unity of purpose only so far as fundamentals or underlying principles are concerned and then to branch off into infinite varieties so far as details of growth or the law of manifestation is concerned. While the underlying principle may be one to all humanity, the law of manifestation or individual growth and expression as it is sometimes called, would necessarily be of infinite variety; for, it is influenced by so many varieties of circumstances, states and conditions, both objective and subjective, that it is very rare to find two persons all alike in every respect. "Not possibly will the soul all rich, all eloquent with thousand-cloven tongue, deign to repeat itself." In brief, 'Manifest yourself.' And you will find that "there is for you at this moment an utterance as brave and grand, as that of the colossal chisel of Phidias, or the trowel of the Egyptians, or pen of Moses or Dante, *but different from all these*." The italics are ours.

And how will you teach it? Here must every one, each country, state, province or district, each distinct unit from the individual to the nation, from each village community to every province and state, start, each for itself individually, on terms suited to itself and work out its own salvation. Here comes the parting of ways and no external force, no power of Government, no centralised organisation can be of any help from this point; on the contrary, all stereotyping of education by code rules and other iron bound compliances of modern state craft, is a distinct disadvantage; a wilful strangling or smothering of the tender sprouts of national education. It is because of this truth I have studiously avoided entering on details here. One can only lay down the fundamental principle and see that it is adhered to. And if the State can do this much its duty then is merely to watch the growth of the institutions and help it grow on its own lines, taking care that the unfoldment of the soul or the drawing out of the spirit that is in the childman, is the outcome of all the processes of education however varied they may be in practice. Enforce the principle and teach how to apply it and leave the other small details as to means and materials to the resources of local men, minds and talents. They cannot possibly err. For the insisting of the principle which is the true method of education (the "pedagogic method" they call it in the West,) will never give room for the teacher to err in any eggregious way provided he has been able to grasp the principles and assimilate it internally and not merely mechanically—retaining it as a load in his memory—as most teachers now-a-days do. This can be done only by a teacher who has himself realised the truth of the principles he is teaching to his pupils.

'No good work is ever lost." "My best wishes for the success of your publication"—*Sir Harold Stuart, K. C. V. O.*

புஸ்தகம்-25.] "பஞ்சவிம்சதிபாக்கியம்" "Our Jubilee Year." [சஞ்சிகை-4.

"The Children's Favourite, the Teachers' Help, and the Parents' Guide."

பிங்களவூ ஆடிமீ. } விவேக சிந்தாமணி { July-August. 1917.

FIRST ESTABLISHED, 1892. OUR JUBILEE YEAR, 1917.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றோ மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## THE FUNDAMENTAL BASIS OF PRIMARY EDUCATION.

### பிரதம வித்யா சிக்ஷை லக்ஷியம்.

1905-ம் வருஷத்தில் சென்னைவித்யா இலாகாத்தலைவர் இந்தியா கவர்ன்மெண்டார் 1903-ம் வருஷத்தில் வெளியிட்ட அவர்களுடைய வித்யாவிர்த்தி முறையின் முக்கியக் கொள்கைகளை யனுசரித்து இவ்விராஜதானியில் பிரதம வித்தையைப் பரவச்செய்வதற்கான புதிய ஏற்பாடு தயார்செய்து வெளியிட்டபொழுது பிரதமவித்யா சிக்ஷையின் லக்ஷியமாயுள்ள கொள்கைகளைப்பற்றி வற்புறுத்தி ம-ா-ா-ஸ்ரீ, வி. வி. ஸ்வாமிநாதையர் அவர்கள் தாம் 1903-ம் வருஷத்தில் எழுதிய விஷயங்களிற் கண்டவற்றை யெடுத்து வற்புறுத்தி ஆங்கிலேய பத்திரிகைகளில் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். இப்பொழுது 12-வருஷங்களாகியும் அம்மூலக் கொள்கைகளை வற்புறுத்திப்பேசவேண்டிய அவசியம் குறையவில்லை. ஆதலால் அதன் முக்கியாம்சத்தைத் திரட்டி முகட்டில் இங்கிலீஷில் தானே அச்சிட்டு அதையே தமிழிலும் வற்புறுத்திக் காட்டுகிறோம். இந்த 20-வது நூற்றாண்டு பிறக்கவும் வித்யாவிஷயத்தில் இதற்குமுன்னிருந்த தப்பெண்ணங்களெல்லாம் மாறத் தலைப்பட்டன. அமெரிக்கா தேசத்தார்கள் அதற்குமுன் தங்கள் வித்தியாப்பியாச முறையிலிருந்த குற்றங்கோணல்களையுணர்ந்து திருத்திக்கொள்ளத் தலைப்பட்டார்கள். அவர்கள் படிப்பின் நோக்கமெல்லாம் மனம்படியப் பெறுவதற்காகவென்றே யறிந்துகொண்டார்கள். மனம்படியப் பெறுவதெல்லாம் ஸத்யத்தையுணர்ந்து பொய்யைத்தள்ளி மெய்யைத்தழுவிக் கடவுளை வழிபடுவதற்கேயன்றி வேறில்லை யென்பது அனாதிகாலமுதலுள்ள இத்தேசத்து முக்கிய தர்மம். திருவள்ளுவநாயனார்

"கற்றதனா லானபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழப்பெறாஅ ரெனின்?"

என்றதன் உண்மையை மேற்றிசையார் இப்பொழுதுதான் சிறுகச்சிறுக உணர்ந்து கிரகித்து வருகிறார்கள். இப்பொழுது நடந்து வரும் ஐரோப்பிய மஹாயுத்தம் இந்த உண்மையை பிரிடிஷாரும் உணரும்படி நன்றாக வற்புறுத்திக்காட்டிவிட்டது. ஆதலால் பிரிடிஷ் அதிகாரிகள் அவர்கள் படிப்பு முறையை ஆதியோடந்தம் திருத்த முயன்று ஏராளமான பணச்செலவிட்டு வருகிறார்கள். பிரிடிஷ் கவர்ன்மெண்டில் வித்யாமந்திரியாகவிருக்கும் மிஸ்டர் பிஷர் அவர்கள் இதைப்பற்றிச் சவிஸ்தாரமாய்ப் பேசி ஸர்க்கார் செலவில் வித்யா சீர்திருத்தத்தை முன்னிட்டு ஏராளமாகச் செலவிட வரவு செலவுகணக்கில் மதிப்புப் போட்டிருப்பதை யெடுத்து விளக்கிச்சொன்னார். இந்தியா கவர்ன்மெண்டாரும் பிரதம வித்தையின் முக்கியத்தைப்பற்றி விசேஷ

கவலைகொண்டவராயிருந்தும் யுத்தச்செலவு முடக்கடியினால் முன்போல் செலவு செய்ய சாத்தியமில்லையென்று சொல்லி வருகிறார்கள். இந்தியாவில் எங்கும் பிரதமவித்தை இலவசமாய்ச் சொல்லிக்கொடுக்கப்பட வேண்டுமென்கிறார்கள். பம்பாய் சட்ட நிரூபணசபையில் ஒரு மெம்பரான மிஸ்டர் பேடல் அவர்கள் அவ்விராஜதானியிலுள்ள முனிஸிபாலிடியார் அவர்கள் அதிகாரத்துக்குள்பட்ட பட்டணங்களில் பிரதம வித்தையை எல்லாருக்கும் இலவசமாய்ப் போதிக்க முயலவேண்டுமென்று உத்தேசித்து அப்படி அவர்கள் முயற்சியெடுத்துக்கொள்வதற் கனுகூலமாக ஒரு சட்டமுண்டுபண்ண உத்தேசித்திருக்கிறார். அவர் அதற்காகத் தயார்செய்த மசோதா இந்தியா கவர்ன்மெண்டார் அனுமதிபெற்று ஜூலை மாசத்து பம்பாய் சட்ட நிரூபண சபையில் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படுமென்று தெரியவருகிறது. ஆதலால் இந்த சமயத்தில் பிரதம வித்யா சிக்ஷையின் லக்ஷியமான கொள்கை யின்னதென்பதை வற்புறுத்திக் கூற வேண்டியது அவசியமாயிருக்கிறது என்பதை எல்லாரும் ஒத்துக்கொள்வார்கள். எல்லா வித்தைகளின் நோக்கமும் ஆத்மவிர்த்தியேயன்றி வேறல்ல. ஆத்ம விர்த்தியென்றால் அறிவு விர்த்தியென்று அர்த்தம். அறிவு விர்த்தியாவதற்கு குழந்தைகளிடத்தில் ஸ்வபாவமாயுள்ள ஆத்மசக்தியை வளரச்செய்ய வேண்டும். அப்படி ஆத்மசக்தி தானாய் வளருவதற்கான சாதக சாதனங்களே வித்யாப்பியாச முறையென்று சொல்லப்பெறுவது.

"விளையும் பயிர் முளையிலே"

என்பது பழமொழியாதலால், குழந்தைகளுக்கு பால்யத்தில் வித்யாப்பியாசம் எப்படி அமைகிறதோ அதுபோலவே யிருக்கும் அவர்கள் மனச்சார்பும் பிரவிர்த்தியும். ஆகையால் குழந்தைகளுக்குப் பிரதமவித்தை போதிப்பதில் நாம் எல்லாரும் முக்கியமாய் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அது அவர்கள் சன்மார்க்க வழியில் நடக்க ஆதாரமாயுள்ள அப்யாசங்களைக் கையாடவேண்டும் என்பதே.

"சன்மார்க்கமே நன்மார்க்கம்"

என்று திருமந்திரோபதேச மிருப்பதால் மனிதனது சத்குணப் பிரவிர்த்தியே இகபரமிரண்டிற்கும் நல்லதாகி "நன்மார்க்கம்" என்று கொண்டாடத்தக்கதாயிருக்கிறது. இந்த சத்குணம் எல்லாக் குழந்தைகளிடத்தும் வித்தில் முளைபோல் மறைந்திருக்கிறது. அதை வெளிப்படுத்துவதே வித்தியாமுறை. அதை வெளிப்படச் செய்வதில் பிரகிருதி-தர்மமறிந்துழைக்கவேண்டியது நம்முடைய கடமை.

"எள்ளுப்போட்டால் கொள்ளு முளைக்குமா?"

அஃதேபோல குழந்தைகள் அவரவர்களுடைய பூர்வ ஜன்மவாசனைப்படி அமைந்த ஸ்வபாவ குணத்துக்குத் தக்கபடியே மேல் விர்த்தியடைவது சாத்தியமாகும். அதற்கு மாறாக நடப்பது இயற்கை விரோதமால் சாத்தியமில்லை. ஆகையால் வியவசாய குலத்தில் பிறந்து பழகிய பிள்ளைக்கு ராயசக்காரன் படிப்பும், ராயசக்காரன் தொழிலுக்கு வியவசாயப் படிப்பும் பொருத்தமாயிராது. ஆயினும் எல்லாருக்கும் குணம் ஒன்றே. ஆதலால் மூலதத்துவத்தை யறிந்து குழந்தைகளைப் பழக்கினால் அவரவர்கள் ஸ்வபாவத்துக்குத் தக்கபடி குணப் பிரவிர்த்தி யுண்டாகும். அதைக் கொண்டு அவரவர்களுடைய மனச் சார்பறிந்து மேலே ஜீவனத்துக்குவேண்டிய தொழிலை அவரவர்கள் காலக்கிரமத்தில் படித்துப் பழகித் தேறுவார்கள்.

தொழிலில் கருமானானாலும் பெருமானானாலும் எல்லாருக்கும் நுட்ப புத்தியும், கைப்பழக்கம், பார்வை நுட்பம், கேள்விநுட்பம் முதலான பழக்கவழக்கங்களும் இன்றியமையாதனவாம். ஆகையால் பிரதமவித்தை குழந்தைகளுக்கு ஸ்வபாவமாயுள்ள இயற்கைக் குணங்கள் வளர்ந்து விரிந்து விருத்தியடையத் தக்கனவாக விருக்கவேண்டும். பார்ப்பாரைப் பார்த்து நடித்தப் பழகுதல் இலகுவாம். இத

ற்கு கிளிப்பிள்ளைப் படிப்பு என்று பேர். ஆனால் தானாகப்பார்த்துச் சிந்தித்து எதையும் ஸ்வயமாக எண்ணித்துணியும் சக்தி உலகில் அரிதாம். தானாக எண்ணித்துணியும் துணிபும், "துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக்கு" என்பதற்கு ஒக்க, முன்வைத்தகாலைப் பின்வைக்காது நினைத்தது முடிக்கும் ஆற்றலுடையவர்களுமே ஸ்வதந்திர புத்தியுள்ளவர்கள். இப்படிப்பட்ட ஸ்வதந்தர புத்தியுள்ளவர்களே உலக விர்த்திக்கு வேண்டியவர்கள். இவர்களாலேயே உலகம் முன்னுக்கு வரத்தக்கது. ஆகையால் இப்பேர்ப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் உலகப் பிரஸித்தராவர். உலகப் பிரஸித்தர் என்றால் உலகத்தில் மேலான ஸித்திபடைந்தவர்கள் என்று அதனால் யாவரும் அறியப்பெற்றவர்கள். குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதில் அவர்கள் மனதையும் இந்திரியங்களையும் கூர்மைப்படுத்தி அவைகள் தம் தொழிலைக் குறைவறச் செலுத்தத் தக்கவையாகச் செய்யவேண்டும். இந்திரியங்கள் மனதுக்கும், மனது அறிவுக்கும் உள்பட்டவையாக விருக்கவேண்டும். அப்படிக்கின்றி "தன்னைக் குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்" படுகுழியில் விழுந்தகப்பட்ட யானைபோல் ஸ்வதந்தர புத்தியை இழந்துவிடுவார்கள். ஆகையால் மனதைக் கூர்மைப்படுத்தி அந்த மனதாங் கருவி சரியாக ஆளப்பட நல்லறிவு விர்த்தியாக வேண்டும். "தன்னைத்தான் நெஞ்சம் கரியாகத் தானடங்கின் பின்னைத்தானெய்தாற் பயனில்லை." ஆகையால் மனதைக் கூர்மைப்படுத்துகையில் மனச்சாக்ஷியாம் உள்ளத்தையும் சுத்தியாக வைத்துக்கொண்டிருக்கச் செய்யவேண்டும். இல்லையேல் "மாசுமறு" படிந்துவிடும். விவேகத்தாய் தன் பிள்ளைக்குத் தொட்டில் பழக்கமாய்க் கற்பித்துள்ள விதம் ஒவ்வொரு தாயும், இளம் பிள்ளைகளைப் படிப்பிக்கும் ஒவ்வொரு போதகாசிரியரும் அந்தத்தாய் ஸ்தானத்திலிருந்து குழந்தைகள் மனதில் சன்மார்க்கம் படியும்படி பழக்கல்வேண்டும். "நூலைப்போல சீலை: தாயைப்போல பிள்ளை" யென்றிருப்பதால் தாயின் குணமே குழந்தைக்குப் படியும். ஆகையால் தாய்மார்களெல்லாம் விவேக சம்பன்னர்களா யிருக்கவேண்டும். மௌட்டிய நிலையிலிருந்து பிள்ளையைப் பெறுகிறவர்களெல்லாம் தேசத்தில் மௌட்டியத்தை வளரச் செய்கிறவர்களாகிறார்கள்.

'விவேகத்தாய்' தானே தேசக்ஷேமத்துக்கு இன்றியமையாத சாதனமும் சாதகமுமாகின்றனள். அவள் தன் குழந்தைக்கு நன்மார்க்கத்தைத் தொட்டிற் பழக்கமாய்ப் படியவைப்பாள்.

"தள்ளாநடை போல்நடப்பாய்
 தக்கபேர் நீயெடுப்பாய்
பிள்ளையென்னும் பக்குவத்தே
 பெருங்கீர்த்தி நீபடைப்பாய்.

"வாலிபந்தா னென்றுசொல்லி
 மாசுமறு செய்யாதே
பாலியந்தா னென்றுசொல்லி
 பழிபழுது செய்யாதே.

"பிஞ்சில் விளைவதுவே
 பெரியமர மானபின்பும்
மிஞ்சிநிற்கும் வாசனையை
 வேறுக்கக் கூடியதோ.

"மட்டில்லா வுண்மையிது
 மனதுதனில் நீதரிப்பாய்
தொட்டிற் பழக்கமதே
 சுடுகாடு மட்டுமம்மா."

என்று இப்படியாக மேலான நீதி தத்துவங்களை தன் சொந்த அனுபவத்திலிருந்து எடுத்தோதிப் பச்சை மரத்தாணிபோல் அது குழந்தையின் இளமனதிற் பதியும்படி செய்யவேண்டும். இதுதான் உண்மையான பிரதமவித்தை.

## ON THE FIRST TEACHING OF LITERATURE TO CHILDREN.

## சிறுவர்களுக்கு கற்பிக்கவேண்டிய பிரதம போதனுமுறை.

சிறுபிள்ளைகளுக்குத் தெரியவேண்டிய நூதன விஷயங்கள் எல்லாவற்றையும் நாம் அவர்களுக்குச் சொல்லவேண்டுமென்று மட்டும் மொத்தமாய் குறிப்பிட்டிருக்கிறோம். அதைப் பற்றிச் சற்று இங்கு விவரித்து எழுதுவோம். வீட்டிலுள்ள அத்தை பாட்டிகளிடத்திலிருந்து கதைகள் கேட்பதிலும் தாங்கள் கேட்ட கதைகளைப் பிறருக்குச் சொல்வதிலும் சிறு குழந்தைகள் மிகுந்த ஆவலுள்ளவர்களென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் புது விஷயங்களை யவர்களுக்கு விளக்குவதற்குப் கதைகள் ஒரு பெரிய சாதனம் என்று நிச்சயமாய் சொல்லலாம். முக்கியமாய் அவர்களிடத்தில் நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் ஏற்படும்படி கதைகள் மூலமாய்த்தான் நாம் பிரயாசைப்படவேண்டியது. முதல் முதல் பிள்ளைகள் கையில் கொடுக்கப்படும் புஸ்தகங்களில் கதைகள் நிரம்ப இருப்பதற்கு இதுதான் காரணம். நமக்குள் பழக்கத்திலிருக்கும் எல்லாக் கதைகளும் இந்த மாதிரி பயன்படா. இப்படி யுபயோகப்படத்தக்க கதைகள் எத்தன்மைத்தாயிருக்க வேண்டுமென்றும் அவைகளை யெப்படிச்சொல்ல வேண்டுமென்றும் கீழே யெழுதுவோம்.

1. கதையானது சாதுர்யமானதும் பிள்ளைகளுக்கு இன்பத்தைத் தரத்தக்கதாயுமிருக்க வேண்டியது. ஒரு முக்கியமான நீதிவிஷயம் அடங்கினதாயும் கதையில் சொல்லப்படும் மற்ற எல்லா விருத்தாந்தங்களும் இதை பந்சரித்திருப்பதுடன் இதை வற்புறுத்துவனவாயு மிருத்தல்வேண்டும். கதையின் போக்கு அதைக் கேட்கும் பிள்ளைகளுக்கு அதிலடங்கிய நீதியை விளக்கி யெடுத்துக் காட்டும்படியாகவும் வேறு எத்தனையோ விருத்தாந்தங்கள் கதையில் கலந்திருந்தபோதிலும் கதையின் முக்கிய உத்தேசமெதுவோ அது மட்டும் எப்பொழுதும் மேலிட்டிருக்கும்படியாகவும் நாம் பார்த்துக்கொள்ளவேண்டியது.

2. கதைகளிலடங்கிய விஷயங்கள் பிள்ளைகளின் மனோபாவங்களுக்கு ஒத்திருக்கவேண்டியது அவசியம். பிள்ளைகளுக்கு மொத்தத்தில் 'நன்மை விதைத்தால் நன்மைவிளையும், தீமை விதைத்தால் தீமை விளையும்' என்று பெரியோர் சொல்லத்தெரியும். அவர்கள் கேட்கும் கதைகளிலும் இந்த நியாயம் ஏற்பட்டிருக்கிறதா என்று ஆவலுடன் பார்ப்பார்கள். ஆகையால் கதையின் விருத்தாந்தங்கள் இந்த அபிப்பிராயத்தை யொட்டியிருக்கவேண்டும். ஸாதாரணமாய் பிரபஞ்சத்தில் நல்லவர்கள் துன்பப்படுவதும் கெட்டவர்கள் விளங்குவதும் நாம் காணலாம். இது ஸகஜமேனும் இந்த மாதிரி நாம் சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகளை முடிக்கக்கூடாது. இது அவர்களுக்கு அநியாயமாய்த் தோன்றும். இதின் காரணமும் அதிலிருந்து அறிந்து கொள்ளவேண்டிய நீதியும் வயது வந்தவர்களுக்குத் தெரியுமேயல்லாது சிறு பிள்ளைகளுக்குப் புலப்படாதாகையால் அவர்கள் வயதுக்கும் அறிவுக்கும் தக்கபடி எந்தமட்டில் அவர்களுக்கு விளக்கமுடியுமோ அந்த மட்டில்தான் நாம் கதையில் பிரயோகிக்கவேண்டும்.

3. கதையானது நல்லொழுக்கத்தாலுண்டாகும் நன்மைகளை யெடுத்துக் காட்டுவதாயிருக்கவேண்டுமே யொழிய கெட்ட நடத்தையினுல் விளையும் தீமைகளை யெடுத்துக் காட்டுவதாயிருக்கக்கூடாது. இந்த மாதிரி கெட்ட நடவடிக்கைகள் ஒருவனிடமிருக்குமாயின் இன்ன இன்ன தீங்குவிளையும். ஆகையால் இவைகளை நீக்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் இவைகளை யெடுத்துச்சொல்லலாமென்று சிலர் அபிப்பிராயப் படலாம். அது தப்பு. அவைகள் கூடாதென்று கண்டிப்பாய் சொல்வதற்காகக்கூட அவைகளைப்

பற்றிப் பேசக்கூடாது. இப்படியும் நடவடிக்கைகள் உண்டு. ஆனல் நாம் அவற்றில் பிரவேசிக்கக்கூடாதென்று அவர்களுக்குத் தோன்றச்செய்வதைப் பார்க்கிலும் அப்படியும் உலகத்திலுண்டென்ற விஷயமே தெரியாமலிருப்பதுதான் மிக்க லாபகரமானது. அபாயங்கள் உண்டென்று தெரிந்து அந்த வழியில்போய் அவைகளை எதிர்த்து ஜெயிக்க முயலுவதைப்பார்க்கிலும் அவ்வழியே போகாதிருத்தல் நன்று. ஆகையால் பிள்ளைகளுக்கு மனவருத்தத்தையும் பயத்தையும் உண்டுபண்ணக்கூடிய கதைகளாயில்லாமல் எப்பொழுதும் உண்மைபேசுதல் பெரியோருக்குக் கீழ்ப் படிந்து நடத்தல் முதலிய நற்குணங்களினல் உண்டாகக்கூடிய லாபங்களை யெடுத்துக்காட்டும் கதைகளா யிருக்கவேண்டும். (வயது சென்றால் குழந்தைகளுக்கு பால்யப் பழக்கமாய் அமைந்த சுபவாசனையானது தீமைகளை யுணரும்போது அந்த வாசனை படியாதபடி பாதுகாக்கும்.)

4. கதையிலடங்கிய விருத்தாந்தங்கள் ஸாதாரணமாய் பிள்ளைகள் அநுபவத்தில் நடக்கக்கூடியதாயிருக்கவேண்டும். அசாத்திய அற்புதங்களாயிருந்தால் பிள்ளைகளுக்கு அவைகளில் நம்பிக்கை வரமாட்டாது.

மேற்குறித்த இலக்ஷணங்களடங்கிய கதைகளைப் பொறுக்கியெடுப்பது உபாத்தியாயரின் முதல்வேலை. பிறகு அதை சாதுர்யமாய் எடுத்துச்சொல்லும் சக்தி யவசியம். சிலருக்கு இந்த சாமர்த்தியம் ஸ்வபாவத்திலேயே இருப்பதுண்டு. அவர்கள் வாயைத்திறந்து விட்டால் எல்லாரும் கேட்க ஆவல்கொண்டு செவி கொடுப்பார்கள். ஆகிலும் பழக்கத்தினலும் இந்த சாமர்த்தியம் ஏற்படலாம். இதில் பின் வருவனவற்றை முக்கியமாய் கவனிக்கவேண்டியது. முதல் முதல் கதைமுழுமையும் நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது. சிலர் கதையைச்சொல்ல ஆரம்பித்துப் பாதியானவுடன் நடுவில் சில ஸங்கதிகள் ஞோர்வையாய் ஞாபகத்துக்குவராமல் 'இதோ வருகிறேன் சற்றுப்பொறு' என்று நிறுத்தி யோசிப்பதுண்டு. மறக்கப்பட்ட விஷயங்கள் ஞாபகத்துக்கு வருகிறதுமில்லை. ஆரம்பித்த கதை முடிகிறதுமில்லை. சொல்லவந்தவருக்கும் கேட்கப் புகுந்தவர்களுக்கும் எவ்வளவு மனவருத்தமாயிருக்கும்! ஆகையால்தான் நாம் சொல்லப்புகுமுன் கதை முழுமையும் நன்றாய் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டியது. அப்படிச் செய்வதுடன் எந்தமாதிரி பிள்ளைகளுக்குச் சொன்னல் அதிலுள்ள நீதி நன்றாய்த் தெரியவருமோ அந்தமாதிரி யதன் பாகங்களை யேற்படுத்திக் கொள்ளவேண்டியது. சில கதைகளில் அனேக அம்சங்கள் அடங்கியிருக்குமாகையால் இன்னதுதான் இதில் முக்கிய உத்தேசமென்பது விளங்காமலேயிருக்கும். முதலில் கதையை யொருமுறை சொல்லியும் அதிலுள்ள நீதி நன்றாய்த் தெரியும்படி திரும்பியெடுத்து முக்கிய அம்சங்களைச் சொல்லுதலும் ஆக இரண்டுமுறை திருப்பவேண்டிய அகத்தியமில்லாத வண்ணமாய் ஆரம்பத்திலேயே நன்றாய் எல்லாப் பாகங்களையும், அவைகளை விவரித்துச் சொல்லவேண்டிய முறைமையையும் ஆலோசித்து வைத்துக் கொள்ளவேண்டியது. அப்படி நாம் சொல்வதில் கதைபாதி கேட்டவுடனே முடிவு இன்னமாய்த்தானிருக்கும் என்று பிள்ளைளே நிதானிக்கக் கூடியதாயிருக்கவேண்டும்.

மேலும், வெறும் கதையைமட்டும் சொல்லாமல் அங்கங்கு நின்று, இடங்கள், மனிதர்கள், வஸ்துக்கள் இவைகளைப்பற்றி ஸாவகாசமாய் வர்ணித்துச் சொல்லவேண்டும். கதைதானே முக்கியமென்று இவைகளைப்பற்றி யொன்றும் சொல்லாமல் ஒட்டிவிடக்கூடாது. இந்த வர்ணனைகளினல் கதையின் சந்தர்ப்பங்கள் தெளிவாகலாம். மேலும் கதையொரே யடியாய் 'காசிக்குப்போனன் காவடிகொண்டு வந்தா'னென்று மட்டுமிருந்தால் சுவாரசியமாயிருக்காது. இந்த வர்ணனைகளினல் 'மேல்

என்ன என்ன!' வென்ற ஆவலுண்டாகி கதையில் சிரத்தை யதிகரிக்கும்.

கடைசியாக கதைகளைக் குழந்தைகளுக்கு எளிதில் தெரியும்படி சிறிய பதங்களைக் கொண்டு சொல்லவேண்டும். ஆனல் குழந்தைகள் பேசும்பொழுது உபயோகிக்கிறார்களே கொச்சைவார்த்தைகள் அவைகளையுபயோகித்து நாம் பேசக்கூடாது. நம்முடைய பேச்சு உண்மையில் வேறு மாதிரியென்று அவர்களுக்குத் தெரியுமாகையால் அவர்களைப் போல் நாமும் பேசினுல் தங்களைப் பரிகாசம் செய்வதாய்த்தான் நினைப்பார்கள். அப்படிக்கில்லாமல் சாதாரணமாய் நாம் பேசவேண்டும்.

மேல்சொன்ன ரீதியில் கதைகளைப்பொறுக்கியெடுத்து சாதுர்யமாய் பிள்ளைகளுக்குச் சொல்வதினுல் அனேக புது விஷயங்கள் தெரிவதுடன் நன்னடவடிக்கைகளும் நற்குணங்களும் படிய இடமுண்டு. அதோடுகூட இக்காலத்துச் சிறுவர்களுக்கும் புராதன வழக்கங்களைப்பற்றிப் பேசினுல் யோசனையின்றி மிக இளப்பமாகப் பேசுவது வழக்கமாயிருக்கிறது. காலசக்கிரம் சுழலச்சுழல கல்வியும், நாகரீகமும், அதனுல் புத்தி விர்த்தியும் எவ்வளவோ அதிகரித்து வருகின்றன. முதலில், ஒரு நூதன விஷயம் அல்லது சூக்ஷ்மம் அல்லது யந்திரத்தைக் கண்டுபிடிக்கும்பொழுது எவ்வளவோ பாடுபட்டு தன்னுடைய சுயபுத்தி வலிமையாலும், யுக்தி விசேஷத்தாலும் கண்டுபிடித்து சொல்லமுடியாத கஷ்டநஷ்டங்களுக்குட்பட்டு பலதடவை தன்னுடைய யத்தனங்கள் தானறியாத தப்புத்தவறுதல்களால் பலிக்காமற்போய் பின்பு, கடைசியில் உண்மை வழியின்னதென்று கண்டுபிடித்து மற்றவர்கள் தன்னைப்போல் பிசகிப்போகாவண்ணம் அவ்வுண்மையை நன்ருக விளங்கவைக்கப் பாடுபடவேண்டியிருக்கிறது. பின்பு வருகிறவர்கள் எவ்வளவோ பாடுப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட சூக்ஷ்மத்தை சுலபத்தில் தங்களுடைய தாக்கிக்கொண்டு அதற்குமேல் தங்கள் புத்தியை விர்த்திசெய்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். இதனுல் காலம் செல்லச் செல்ல உலகம் விர்த்தி யதிகரித்துக்கொண்டு வருவதற்கு மிகவும் சகஜமாகத் தோன்றும். ஆனல் இப்படிப்பட்ட விர்த்தியுண்டாவதற்குப் பின் காலத்து மனிதர்கள் முன்காலத்து மனிதர்களிடமிருந்து வந்த அறிவு, ஞானம், ஆசார, அனுஷ்டானங்கள், இவற்றில் உபயோகமாயுள்ளவற்றைப் பகுத்தறிந்து கிரகித்துக்கொண்டு உபயோகமல்லாதவற்றையே ஆராய்ந்து தள்ளுவதற்கு வேண்டிய பகுத்தறிவு விசேஷமாயிருக்கவேண்டியது தீரா அவசியம். இப்பகுத்தறிவு குறையக் குறைய, ஒரு தேசத்து ஜனங்கள் தங்கள் முன்னோர் நிலைமையை விடத் தாழ்ந்த நிலைக்கு வருவதும், மேற்குறித்த பகுத்தறிவு விர்த்தியாக ஆக அவர்களும் காலம் போகப்போக மேன்மேலும் விருத்தியடைந்து மேன்மைப்பட்டு வருவதும் பிரத்தியக்ஷமாக விளங்கும். அன்னிய வழக்கங்களை அனுசரிப்பதிலும் இக்கோட்பாடு முற்றும் பொருந்தத்தக்கதே. ஆகையால் நாம் ஒரு விஷயத்தை நல்லது கெட்டதென்று அதை அனுஷ்டிக்கவோ தள்ளும்படி செய்யவோ தீர்மானிக்குமுன் நமது பகுத்தறிவை உபயோகித்து அதிலுள்ள குணத்தையும் குற்றத்தை யுமாராய்ந்து குணமாயிருப்பதைக் கிரகித்துக்கொண்டு குற்றமாயிருப்பதை விலக்கித் தள்ளல் வேண்டும். இப்பகுத்தறிவு குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே பிடித்து பழக்கப்படவேண்டும். மிகவும் இளம்பிராயத்தில் கற்பனுசக்தியாயும், பிறகு விசார சக்தியாயும் விருத்தியடைந்து, பகுத்தறிவு நன்கு ஊன்றும்படிச் செய்வது, பிரதம வித்யாபோதனையின் லக்ஷியமாகும். இதைப்பற்றி கொஞ்சம் விவரித்துச் சொல்லுவோம்.

சிறு குழந்தைகள் பொம்மை முதலியவைகளை வைத்துக்கொண்டு விளையாடும்பொழுது பொம்மை தூங்குகிறது, அழுகிறது என்று பற்பல பாவங்களை கற்பித்து விளையாடுவு

தைப் பார்த்திருக்கிறோம். இளம் பிராயத்தில், கற்பனா சக்தியாயிருக்கும். இதுவே வயது ஆக, ஆக ஒவ்வொன்றையும்பற்றி விசாரித்துத் தெரிந்துகொள்ள விரும்பும் விசார சக்தியாயிருக்கிறது. வயது முதிர்ந்தவர்கள், இது சம்பிரதாயம், இது இப்படித்தான் இருக்கும், அது அப்படித்தான் நடக்கும் என்று வேறு கவலைகளால் விசாரசக்தி குறைந்திருப்பதுபோல் பாலர்களிருப்பதில்லை. உலக கவலையற்று, தூயமனத்தோர்களாகையால் ஒவ்வொன்றையும், ஊன்றி விசாரணை செய்யும் சக்தி பாலர்களுக்கே மிகுதி. முன் ஒரு சஞ்சிகையில் பாலர்களுக்குள்ள விசார சக்தியைப் பற்றி எழுதியிருந்ததை வாசித்த ஒரு மாது பின்வருமாறு சொன்னாள்: "பத்திரிகையில் பாலர்களுக்கு விசாரபுத்தி யதிகம்" என்று கூறியிருப்பதை நான் சாக்ஷாத்காரமாய் என் மைந்தனிடம் பார்த்திருக்கிறேன். அவனுக்கு இப்பொழுது வயது ஐந்து. கொஞ்ச காலத்திற்குமுன், மதுரையில் வைகை நதியில் ஜலமில்லாமல் வரண்டு, ஜனங்கள் அங்கங்கு ஊற்றுகள்தோன்றி ஜலத்தை உபயோகித்துக் கொண்டிருந்த காலத்தில், நான் என் தகப்பனாருடனும், மைந்தனுடனும், அவகாசமாய் வரண்டிருந்த வைகையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது விளையாட்டாக மணலைப் பறித்துக்கொண்டிருந்தோம். கொஞ்சம், தோண்டினவுடன், ஜலம், குபீரென வெளிவந்தது. இதைக்கண்ட என் மைந்தன் 'அம்மா, என் இவ்வளவு ஜலத்தையும் கீழே வைத்துக்கொண்டு அதன்மேல் மணலைப் போட்டு மூடிவைத்திருக்கவேண்டும். தோண்டும் கஷ்டம் எதற்கு, ஜலத்தின்கீழ் மணலிருக்கவேண்டியிருக்க அதை ஜலத்தின்மேல் போட்டு மூடியிருப்பது அதிசயமாயிருக்கிறதே,' என்று கேட்டான். அவனுக்கு திருப்திகரமாய் பதில் சொல்ல, எங்களால் முடியவில்லை. பிள்ளைகளை வளர்க்கு முறையில் வளர்க்க கற்றுக்கொள்ளும் வித்தை மிக்க கஷ்டவித்தையே. ஆனால் அப்படி பயின்றுக் கொண்டால் பாலர்களுக்கு புத்தி விசாலமாயிருப்பதோடு அல்லாமல் நமக்கும் மிகப் பலனைக்கொடுத்து அறிவை விருத்திச்செய்கிறது என்றனள்.

குழந்தைகள் பொம்மைகள் முதலியவை களைக்கொண்டு விளையாடும்பொழுது அவைகளின் உறுப்புகளை அவர்களுக்குத் தெரிந்த வார்த்தைகளில் சிறு பாட்டுகளாக அமைத்து, அவர்களை கற்கச்செய்திடில் அதைக் கற்பதே அவர்களுக்கு ஒரு விளையாட்டாயிருப்பதோடு, அவர்கள் உபயோகப்படுத்தும் சாமான்களைப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்துக்கொள்ளுகிறார்கள். பாலசிக்ஷையின் முதல்பாடமாகிய அ என்னும் அக்ஷரத்தை எழுத கற்றுக்கொள்ளாத மழலைச்சொல் கூறும் குழந்தைகள் இம்மாதிரிப் பாட்டுகளை நன்கு மனப்பாடம் செய்து அதற்குரியவைகளைக் காட்டி அவைகளின் கருத்தையும் கிரகித்திருப்பதை பிரத்தியக்ஷமாகப் பிரார்த்திக்கிறோம். அர்த்தம் விளங்காமல் வாசகப் பாடத்தி... ள்ளதை, தலைகீழாக மனப்பாடம்செய்து, தட்டுத் தடையின்றி அதை வாசித்தும், பாராமல் அதை ஒப்பித்தும், இவ்வளவு தூரம் தெரிந்துள்ள கதையின் ஒரு அம்சம்கூட மனதில் பதியாமலும், விளங்காமலும், தற்கால போதனாவிதிப்படி மூன்றாவது வகுப்புகள் வரை பரீக்ஷைகள் தேறியிருக்கும் பாலர்களைப் பார்த்திருக்கிறோம். சுபாவமாக, பாலர்கள் எல்லாருக்குமே புத்தி விசாலம் அதிகமானது. ஆனால் பள்ளியில் நீதியேயில்லாமல், குருட்டுத்தனமாய், மனப்பாடம் செய்யும் முறையால், வயது 8, 9, ஆயினும், மூன்று வகுப்புகள் வாசித்திருந்தும், பள்ளியிலே சேராத மழலைச் சொல்கூறும் குழந்தைக்குள்ள கிரகிக்கும் சக்திகூட இல்லாமல், இழந்து தவிக்கிறார்கள். போதனாமுறையின் விதிகள் சிறிது இடைஞ்சலாயிருப்பினும் உபாத்தியாயர்கள், தங்கள் சொந்த ஊக்கத்தாலும் முயற்சியாலும், பாலர்களுக்குரிய தங்கள் கடமையை திருப்திகரமாய்ச் செய்யக் கடமைப்பட்டவர்களாயிருப்பார்கள். கிராமாந்திரங்களில் தங்களிடம் வாசிக்கும் பாலர்கள் அநேகமாய் தங்களிடம் படிக்கும் பிரதம சிக்ஷையோடுவிட்டு, ஜீவனத்தொழில்களிற்

பிரவேசிக்கிறார்களென்பதையும், அப்படி வாசிக்கும் சொற்பகாலத்திற்குள் பொதுவாய் ஒவ்வொரு விஷயங்களிலும் ஞானமும், நல்லது-தீது, சுலபவழி-கடினவழி என்னும் அறிவும் முக்கியமாய் பகுத்தறிவும், வேண்டியதென்பதை நன்கு உணர்ந்தும், கிராமாந்திரங்களில் தாய்தந்தையர்கள், பாலர்க்குரிய சிக்ஷையைக்கொடுக்கும் சக்தி குன்றினவர்களாயிருக்கிறார்களென்பதையும் ஆதலால் தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட பாலர்களின் சிக்ஷைக்கும் கடைத்தேறுதலுக்கும், பாடசாலை மானேஜர்களும் வித்யா இலாக அதிகாரிகளும், உத்திரவாதிகள், எனப்படினும், தாங்களே, முக்கிய உத்திரவாதிகள் என்பதையும் உபாத்திமைத் தொழில் ஜீவனோபாயத்தொழிலாக மாறியிருப்பினும் அதற்குள்ள மகிமையும், முக்கியப் பொறுப்பும் குன்றவில்லையென்பதையும் தாங்கள் சொற்ப சம்பளத்தினரேயாயினும் தாங்கள் 'ஆசான்' 'குரு' என்னும் ஸ்தானத்திலிருப்பவர்களென்பதையும் நன்கு உணர்ந்து, அதன்படி நடப்பதற்கிடையூறாக என்ன இக்கட்டுகளிருப்பினும், அதை பொருட்படுத்தாது, தங்கள் கடமையைச் செய்யத்துணிந்து, அதற்குள்ள சிரமத்தையும் வகிப்பார்களென்றும் நம்புகிறோம். பாலர்களுக்குரிய பகுத்தறிவை விருத்திசெய்யாது கடைமையில் தவறும் தாய்தந்தையரும், ஆசிரியரும் சத்துருக்களே, எனப் பெரியோர்களும் பின்வருமாறு சொல்லியிருக்கின்றனர்.

" தீதுநன் றறிகிலாச் சேயரென்செய்வார்
கோதற வவரைநன் னெறியிற் கூட்டிடா
தேதங்க ளவர்முன்செய் திழிவைக் கற்பிக்குந்
தாதைதாயாசிரியர் புதல்வருக்குச் சத்துருக்களே.

இப்படியிருக்க, 3-வயதுக் குழந்தைகளுக்கெல்லாம் கிண்டர் கார்டனில், விளையாட்டுப்போல் படிப்புச் சொல்லிக்கொடுத்து அவர்கள் புத்திவிர்த்தி தேகவிர்த்திக்கு வேண்டியவைகள் செய்யப்படுகின்றன என்று, ஒரு பெரியவரிடம் பேசிக்கொண்டிருக்கையில் அவர் சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் சிறு கதைகள் பல சொன்னார். கிண்டர்கார்டன் முறையைத் தெரிந்தவர்கள் ஆராய்ந்து பார்த்து அவைகளின் உபயோகத்தை நிதானித்தறியும் பொருட்டு, சமயம் நேர்ந்தபோது பாலர்களுக்குரைக்கும் சிலபாட்டுகளை வரைந்திருக்கிறோம், பின்னும் வரைவோம்.

## THE STORY OF THE FAMOUS CHOLA KING OF TIRUVARUR.

*From a classic source of dramatisation known as "Tiruvarur Gipsy-song."*

## " மனுநெறிகண்ட சோழன் கதை "

(திருவாரூர்க் குறவஞ்சி.) *

* [குறவஞ்சி யென்றால் குறத்தி பாட்டு என்று அர்த்தம் கொள்ளும். "இறப்பு நிகழ்வெதிர் வென்றுமுக் காலமுந் திறப்பட வுரைப்பது குறத்தி பாட்டே" என்பதனால் இதன் சிறப்பு விளங்கும். இந்தக் குறத்திபாட்டு அகப்பொருள், புறப்பொருள் என்னுமிவற்றுள், புறப்பொருளைக்கொண்டு அகப்பொருளையுணர்த்துவதாகும். 'தலைவன்' என்பது "பதி" அல்லது "பரமாத்மா." 'தலைவி' யென்பது "பிரத்தியகாத்மா" (பாசக்கட்டு நீங்கிய பசு). 'தலைவன்' பவனிவர, "பூதமொடு பழகிவளர இந்திரியங்களாம்" மகளிர் அவர் பவனியைக்கண்டு மோகிக்க, 'தலைவி' மோகினி யுருக்கொண்டுவந்து தலைவனைக்கண்டு மயங்கலும், காமவேதனைப்படுதலும், பாங்கிமார் உபசரித்தலும், குறத்திதோன்றலும், அவளை "யார் ?" என்று வினவ, தலைவனது மலை, நாடு, ஆறு முதலியவற்றின் வளங்கூறி அவை தன்னுடையவாகப் பொருள்படக் கூறலும், பிறகு தலைவி குறிகேட்டலும், 'நீ தலைவனை அடைவாய்' எனக் குறி சொல்லும் அச்சமயம் பகவான் குறவனாகத்தோன்றி குறத்தியைத்தேடி வருதலும், அவ்விருவரும் சந்தித்தலும், அவ்விருவரது ஐக்கியத்தில் தலைவனும் தலைவியும் இரண்டறக் கலந்து நிற்பதுமான காட்சி அற்புதமாயிருக்கும். இது நாடகமாக நடிக்கப்படும்பொழுது கண்ணையும் கருத்தையும் கவர்ந்து எண்ணையும் மெழுத்தையும் விழுங்கி "உண்ணின்று இலங்கும்" உண்மைப் பொருளைத்தழுவி நிற்கும். ஷோடச கலையாகிய "ஸாதாக்கியம்" என்னும் நித்திய வொளியே (Eternal Light) திருவருட் குறத்தி. அவளைக்கண்டு அவள் குறிசொல்லக்கேட்ட ஒருவர் அந்த திருவருட் சோதியாம் 'குறத்தி'யைப் பின்வருமாறு புகழ்ந்து பாடியிருக்கிறார்.

### 'சிரிப்பாணிக்' குறத்தி.

"SHE MADE A LAUGHING-STOCK OF ME"

" சின்னஞ்சிறுக்கியவள் சீர்பாதம் பெற்றமகள்
கன்னக்குறத்தியவள் கண்மணியுள்ளே நுழைவள்
வன்ன வடிவழகியவள் வாயமுத மூன்வளர்க்கும்
[பெற்றியவள்

தென்னைமரத் தடிநீர் தலையிற் றேங்காயிள நீராம்
[போல்
புன்னைமரத்தடிநீர் மாருப் பச்சைநிற மாயிடும்போல்
என்னைமறக்கச்செய்துஎன்னுயிரைக்கொள்ளைகொ
[ண்டு
பொன்னைமறக்கச்செய்துபுண்ணியத்தைக்கொள்ளை
[கொண்டு
தன்னைமறக்காமற்தன்னிலையுங் குலையாமற்றனியிட
[த்தே
என்னை மறக்கச்செய்து என்மனத்தைத் தன்வசமாச்
[செய்துகொண்டு
தன்னையேஎண்ணியெண்ணித்தாபமெல்லாந்தீரவி
[ட்டு
அன்னைபோ லென்னையவள் ஆதரித்து மேதினியிற்
பின்னையெனக் கின்பசுகங் காட்டியொளித்துப்
[பின்னு
'மென்னைமறவாதே'யென் றென்னிடத்திற் சத்தி
[யம் வாங்கி
மன்னுகாதல்மஹிமையினுல்மாயைமயக்கந்தீர்த்துப்
பொன்னுலகுமண்ணுலகும்பொடிபடவேதன்னைக்
[காட்டிச்
சின்னஞ்சிறுக்கியவள்சிரிப்பாணிசெய்தாள்
காணே !"

பின்னேவரும் "மனுநெறிகண்ட சோழன்கதை" திருவாரூர்க் குறவஞ்சி யென்னும் சிறந்த பழமையான நூலினின்றும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அது 'இலக்கணவிளக்க பரம்பரை சோமசுந்திரதேசிகர்' வசமிருக்கிறதாகத் தெரிகிறது. அவர் மாதிரிக்காக வெடுத்துச்காட்டிய அதன் ஓர் அகவல் தன்னில் இந்த பாகம் வருகிறது. இந்தத் திருவாரூர்க் குறவஞ்சி நாடகரூபமாகத் திருவாரூரில் நடிக்கப்பட்டு வந்திருக்கிறதாகக் கூறுகிருர். திருவாரூர்த் தியாகராஜ பெருமான் உத்ஸவங்களில் ஒன்றைப் பின்வருமாறு எடுத்துக்கூறுகிருர். "புற்றிடங்கொண்ட பெருமானுர்க்கு ஆவணித்திங்களில் பவித்ரோத்ஸவம் என்று ஒன்று நடப்பது உண்டு. அக்காலத்து சிவபெருமானுக்கு இரண்டாங்காலம் செய்வித்து எழுந்தருளச் செய்து தேவாசிரயமென்னும் காவணத்துக் கொண்டு வந்து வைத்துப் பத்து நாடகங்கள் தாசிகளால் நடிக்கப்படுவது வழக்கமாயிருக்கின்றது. இந்நாடக வழக்கம் சிலநாளாய் நின்றுபோயினும் உற்சவம் நிற்காது நடந்துவருகின்றது. ஏனையூர்க் குறவஞ்சிபோலன்றி இது நடந்துவருவதே இதன் பெருமைக்குப் போதிய சான்ரும்" என்று 'கமலாஸனி'யில் வற்புறுத்திக் கூறியிருக்கிருர். சிறுவர்க்கு ரஸமாயுள்ள "மனுநெறி கண்ட சோழன்கதை"யைமட்டும் அதிலிருந்து அதன் சுவைவிளங்க இங்கே யெடுத்து அச்சிட்டிருக்கிரும்.]

"மனுநெறி தழைக்க வையகம் புரக்கத்
தினகரர் குலத்தில் திகழ்மனு வேந்தன்
மெய்யன் புலகில் விளங்கிட வேண்டி
ஐயன் பசுவா யந்தகன் கன்ருய்
அணிமுடி நெடிய வம்பொன் வீதியில்
மணிமுடி மன்னர் வருநெருக் கத்தில்
அன்றர சிளங்கன் றரியதேர்க் காலில்
கன்றரை படவே கபிலையுங் கதறிச்
செம்பிய னரசு செலுத்திய மணியைக்
கொம்பினு லசைக்கக் கொற்றவ னடுங்க
முன்னுள் விதியின் முறைமையோ விதுதா
னென்ன காரண மென்றலு மமைச்சன்
ஆவின் மெய்த்துய ரரசனுக் குரைப்பப்
பாவியே னிந்தப் பழிகழி வதற்கு
இளவர சனையூர்ந் திடுவதே வழக்கென்
றளவிலர்க் குரையா வமைச்சனை யனுப்ப
மந்திரி யரசன் மதலை தன்னை
யெங்ஙன மரைப்போ மென்றுதன்
னுயிரை யிழக்க மந்திரி யரைந்த
சேதி கேட்ட வரசன் சிவாய
நமவென் ருேதி யஞ்செழுத் துண்மை
யுள்ளத் தளந்து மனந்த ளர்ந்து
சுடரிளம் பசுவின் துயர்க்குமெய்ச் சுதனும்
படர்புக ழமைச்சன் பழிக்குநா னென்
றுன்னியே மகனை யூர்ந்தபின் னுகந்து
தன்னுயிர் மாய்க்குந் தகைமைகண் டிரங்கிப்
பொன்னிலத் தமரர் பூமழை பொழிய
யின்னிலத் தவர்களிரு கண்ணீர் சொரிய
செந்திரு மாயன் றிசைமுகன் முனிவர்
இந்திரன் முதலோ ரிருபுடை நெருங்க
தவளமால் விடைமேற் றண்ணிலா வணிந்து
பவளவார் சடையார் பரிதிமன் னவன்முன்
னுட்சியாய்த் தோன்றி யனைவருங் காணக்
காட்சியே கொடுக்குங் கமலைநா யகர்முன்
ஆவிளங் கன்று மமைச்சனு மனுவின்
கோவிளங் கன்றுங் கூடவே யெழுந்து
சுந்தரக் கன்றுஞ் சுரபிமா விலங்க
மைந்தனு மமைச்சனு மன்னனை வணங்க
பொன்னடி பணியும் பொழுதுள மிரங்கி
அரசனே யுன்ற னன்புகண் டுகந்தோம்
வரிசைசேர் புவியில் மனுநெறி நடாத்தி
யுன்பெருங் கீர்த்தி யுலகினில் சிறத்திப்
பின்புபே ரின்பம் பெறுவைநீ யென்னத்
திருவருள் புரிந்தே தேவர கண்டர்."

## THE HINDU WOMAN'S IDEAL.

*(Declaration by a Hindu Lady.)*

### ஹிந்து மாதர் லக்ஷியம்.

ஹிந்து மாதர் லக்ஷியம் இன்னதென்று விளங்க அவர்களில் ஒருவர்தானே "எஸ். கல்யாணி அம்மாள்" என்று கையொப்பமிட்டு "சுதேசமித்திரனில்" எழுதியிருப்பதை இங்கு எடுத்துப் பிரசுரிக்கிறோம். "அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு" என்று சொல்லும் மாதர்க்கியல்பாயுள்ள நாற்குணங்களில் 'அச்சம்' என்பது ஆகாதவற்றைக்கண்டு பயப்படல் என்றும், 'நாணம்' என்பது தன்மானம் கெடாது காப்பாற்றும் பொருட்டு அதற்கு மாறானவற்றைக்கண்டு கூசல் என்றும், 'மடம்' என்பது அத்வைதஞானம் ஒன்றைத் தவிர மற்ற இயற்கைஞானமுற்றும் இயல்பாயறியும் 'இயற்கையறிவு' என்றும், 'பயிர்ப்பு' என்றால் உயிரோம்பும் தன்மையென்றும் அர்த்தம் செய்துகொள்வது அவர்களது ஸ்வதர்மத்துக்கேற்றதாகும். இக்குணங்களுக்கு அனர்த்தம் செய்துகொண்டு மாதர்களுக்கு மவுட்டியமே அழகு என்று கூறி அதற்கு உதாரணமாய் "பேதமை யென்பது மாதர்க்கணிகலம்" என்னும் மூத்தோர்சொல் வார்த்தையை அதன் பொருள் உணராமல்கொண்டு உளறுகிறவர்களைக் கண்டித்தும், மாதர்கள் ஸ்வபாவகுணத்தையும் ஸ்வதர்மத்தையும் புகழ்ந்தும் எழுதியிருக்கிறார். 'பெண்' என்றால் பேணப்பெறுமவள், அல்லது பேணத்தகுமவள் என்று அர்த்தம். அப்படிப்பட்டவள் எத்தகையினள் எனில் அதற்கு நீதி வெண்பாவிலே கவி கூறுகிறார் :—

> "அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
> பொன்னி னழகும் புவிப்பொறையும்-வன்னகலை
> வேசி துயிலும் விரல்மந் திரிமதியும்
> பேசி லிவையுடையாள் பெண்."

இது நம்முன்னோர் வாக்கு. இக்காலத்து மாதர்கள் நோக்கும் அதுவேயாக விருப்பதும் அவர்களுடைய உயர் நோக்கும் லக்ஷியமும் தாழவிடாது காக்க அவர்கள் கடமைப் பட்டவர்களாக விருக்கிறார்கள் என்பதை இக்காலத்தவர் உற்றுணர்ந் திருக்கிறார்கள் என்பதும் பின்வருவனவற்றால் விளங்கும்:—

1. "நாணம் நல்லொழுக்கம் நாமறவோம்
நங்கையர்கௌரவம் நாம் துறவோம்
நாரியென்றேசிட ஸம்மதியோம்;
நடுநிலைமையில் வாழ்ந்திடுவோம்.

2. கல்வியுணர்ந்து ஞானம்பெறுவோம்
கடமையறிந்து கீழ்ப்படிவோம்
நல்வழியுரைத்த ஔவையை போன்றிந்
நானிலம்தன்னில் புகழ்பெறுவோம்.

3. குடும்பமே கோயில் என்றிருப்போம்
கொண்ட கணவனே தெய்வமென்போம்
இடுக்கண் தேசத்திற் குற்றிடுமாகில் நாம்
இன்னும் சில துறை யிலுழைப்போம்.

4. ஆசார திருத்தம் என்று சொல்லிப் பெரும்
ஆபாஸத்துறையில் நாமிறங்கோம்
தேசாபிமானமதா பிமானத்துடன்
தேன்மாரி பெய்திட வாழ்ந்திடுவோம்.

5. வீரரான மக்களைப் பெறுவோம்
வாயினில் தாய்மொழி யைப்பிழிவோம்
காருண்யமும் ஞானமும் பெற்றிந் தியாவின்
கழலடி போற்றச்செய்திடுவோம்

6. இந்து மதத்தையே போற்றிடுவோம்
தொந்திரவுபல தாற்றிடுவோம்
எந்த விதத்துநமக்கிண்ணர்மே என்
றெம்மை புகழுமாறு முயல்வோம

7. கணவனே தெய்வமானாலும் மந்த
கடவுளையும் தொழுதிடுவோம்
குணம்பெருகிட குற்றம் குறுகிட
குவலயத்தில் வாழ முயல்வோம்."

## ON ANIMAL INTELLIGENCE.

## ஜீவராசிகளின் புத்திவலிமை.

நமது புராணங்கள் சிலவற்றுள், அசேதனமாகிய எறும்பு, நண்டு முதல் சேதனமாகிய மனிதன் வரையொவ்வொரு பிராணியும் எங்கும் நிறைந்த பரம்பொருளை யர்ச்சித்து முத்திபெற்றதாகக் கதைகளிருக்கின்றனவே, இவற்றையெல்லாம் நாம் உற்றுப்பார்த்தால் நமது புராணங்களிற் கூறியிருக்கிறபடி எல்லா செந்துக்களுக்கும் ஒரே மாதிரியான புத்திவலிமையுண்டா என்று ஒரு சந்தேகம் ஜனிக்கிறது. ஸ்ரீகாளத்தியில் தன் வயிற்றிலிருந்து வாயினால் நூலிழைத்துப் பலநாள் வருந்தி, சிலந்திப்பூச்சியானது கட்டிய கோயிலைச் சிவபிரான் அழித்தகாலத்தில் அச்சிலந்திக் குண்டான மனோவருத்தமும், அதன்மேல் தன்னுயிரை நீக்க விளக்கின்பேரில் பாய்ந்த துணிவும் எவ்வளவு மனோவலிமையைக் காட்டுகிறது? அதே ஸ்தலத்தில் பாம்பு ஒன்று யானையோடு போட்டிபோட்டுச் சிவபிரானை யர்ச்சித்த கதையில் இவ்விரண்டும் தத்தம் பகைவனைக்கொல்ல முயன்று, கடைசியில் பாம்பு யானையின் தும்பிக்கையில் புகுந்து தலையைக்குடைய அந்த யானை தன் தும்பிக்கையை நிலத்தில் ஓங்கி யடித்துப் பழிதீர்க்க யத்தனித்ததும் அந்தப் பிராணிகளின் புத்திவலிமைக்கு ஆத்தாக்ஷியாக இருக்கின்றதல்லவா? ஆகவே, சிலந்திப்பூச்சி, பாம்பு, யானை இந்த மூன்று பிராணிகளின் புத்திவலிமையும் ஒரே தரத்ததா அல்லது வித்தியாசப்பட்டதா? என்ற சந்தேகம் பிறப்பது சகஜம். அடியார்கள் எவ்வளவோ பேர்கள் பிரானை வந்தித்துக் கதிபெற்றிருப்பதாகவும் கதைகளிருக்கின்றனவே. அவற்றிலும், அவர்களுடைய குணங்கள், மேற்கூறிய மூன்று செந்துக்களின் குணம்போலவே கூறப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாகப் பூசித்து முத்திபெற்ற, எறும்பு, நண்டு, கோழி, தவளை, யானை, காக்கை, கருங்குருவி, பன்றி, குரங்கு, மனிதன் முதலிய எல்லாச் சாதிகளுடையவும் புத்திவலிமை எத்தன்மையது? எது உயர்ந்தது எது தாழ்ந்ததென்று பிறக்கும் கேள்விக்கு உத்தரம் தேடவேண்டியதவசியம். சாதாரணமாகவே, மனிதன் மற்ற எல்லாச் சீவராசிகளிலும் புத்தியிற் சிறந்தவன் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். மற்றவற்றில் உயர்வு தாழ்வு இன்னதென்று நிர்ணயிக்க வேண்டுமானால் அவைகளைக் குறித்த சிலகதைகளைப்படித்தால் தான் முடியும்.

புத்திவலிமைக்கெல்லாம் ஆதாரஸ்தானம் மூளையென்று நமக்குத் தெரியுமே. மூளையோ நரம்பு சத்துக்களாலாகியது. ஆகவே புத்திக்குக்காரணமாகிய மூளையின் சக்தி நரம்புக்கும் இருக்கும். எல்லா ஜீவராசிகளும் எவ்வளவு புத்திவலிமையுள்ளவையென்று பார்க்க இப்போது புகுந்தால் நம்மால் முடியாது. பூனை, புலி முதலிய ஒரே சாதிக்குள் சேர்ந்தவற்றிற்குள், ஏதாவதொன்றின் குணத்தைப் பரிசோதித்தால் அதன் குணமே அந்தச் சாதியின் குணமென்று தீர்மானிக்கத் தடையிராது. ஆகவே வர்க்கத்துக்கு ஒன்றாய் எடுத்துக்கொண்டு அவைகளின் குணத்தை யறிந்துகொள்ளுவோம்.

ஜீவராசிகளிலெல்லாம் மிகச் சிறிதான எறும்புகளின் சாமர்த்தியத்தையும் புத்திவலிமையையும் பற்றி ஸர் ஜான் லப்பக் என்பவர் ஒரு பாரதம் எழுதியிருக்கிறார். எறும்புகளின் திருஷ்டி நுட்பமும், ஞாபக சக்தியும், கோபமும், வீரியமும், சுறுசுறுப்பும், பச்சாதாபமும், தந்தியில் பேசுவதுபோல் க்ஷணநேரத்துக்குள் ஒன்றுடனொன்று சம்பாஷித்துக் கொள்ளும் துரிதமும் சக்தியும், கூட்டங்கூடுவதும், இளம் எறும்புகளுக்கு ஆகாரம் ஊட்டுவதும், அவற்றைப் பழக்குவதும், தங்களுக்குள் அடிமை பிடிப்பதும், இனத்தோடு இனம் போர்செய்வதும், செல்வமாகச் சிலவற்றை வளர்ப்பதும், தூக்கம், வேடிக்கைக் காலங்

கள் முதலியவற்றை திட்டப்படுத்தி வைத்திருப்பதும், சஞ்சயனச் சடங்குகள் செய்வதும், முதலான ஒவ்வொன்றுமே ஒரு பெரிய கதையாகுமென்றால் இப்போது இதை நிறுத்திப்பின்னால் சாவதானமாகக் கற்றுக்கொள்வதே நலமானாலும், அவைகளைக்குறித்துச் சிலவிஷயங்கள் இப்பொழுது தெரிந்துகொள்வதில் குற்றமில்லை. அவைகளின் பச்சாதாபத்தைக் குறிக்க அடியில்வரும் கதையொன்றே போதாதா?

'பெல்ட்' என்னும் ஒரு துரை ஒருநாள் தனக்குப் பக்கத்தில் ஒரு எறும்புக்கூட்டம் வரிசையாகப் போவதைக்கண்டு, ஒரு எறும்பின்மேல் ஒரு சிறிய கல்லை எடுத்துவைத்தாராம். இதுபோகாமல் அங்கே நிற்கவே பின்னால் வந்த எறும்பானது இதன் ஸ்திதியைக்கண்டு உடனே பின்னால் திரும்பி ஒவ்வொரு எறும்புக்கும் இந்த சமாசாரத்தைத் தெரிவித்தது. எல்லாமாக அதை விடுவிக்க வந்தன. கல்லைக்கடித்து நகர்த்த முயன்றன. சில, கால் அற்றுப்போனாலும் சரியென்று அந்த எறும்பைப்பற்றி யிழுத்தன. சில, இப்படியாக முயன்று கடைசியில் அதை விடுவித்துக்கொண்டே மீண்டன. பிறகு அவர் ஒரு எறும்பின் தலையைமட்டும் வெளியே விட்டுவிட்டு மற்றப்பாகத்தைக் களிமண்ணையப்பி மூடிவிட்டாராம். இதை மற்ற எறும்புகள் கண்டுபிடித்து அந்தக் களிமண் கட்டியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்தெறிந்து, அடிபட்ட எறும்பைத் தப்புவித்தனவாம். சிலநாளுக்குப் பிறகு இன்னொருநாள் அவர் எறும்பின் வரிசைக்குக் கொஞ்சம் எட்ட எறும்பு ஒன்றைக் களிமண் வைத்து முன்மாதிரிமூட அனேக எறும்புகளுக்கு இது தென்படவேயில்லை. கடைசியாக ஒரு எறும்பு இதைக் கண்டுபிடித்து அதை யிழுக்கப்பார்த்தும் தன்னால் முடியாததுகண்டு திரும்பி வெகு வேகமாய் ஓடிற்றாம். இதை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டதென்றே அவர் எண்ணினாராம். க்ஷணநேரத்துக் கெல்லாம் கூட்டமாக எறும்புகளைக் கூட்டிவந்து அந்த எறும்பை விடுவித்ததாம். மனிதர்களுக்குக்கூட இந்த பூததயை என்னும் குணம் இல்லாமற்போகிறதே!

பூனா பட்டணத்தில் 'சைகீஸ்' என்று ஒரு இராணுவ உத்தியோகஸ்தர் இருந்தார். அவர் சாப்பாட்டு மேஜையின்பேரில் மிகவும் உருசிகரமான பக்ஷணங்கள் வைத்திருப்பதுண்டு. அவைகளுக்கு எறும்புகள் தாராளமாக வந்துகொண்டிருந்தனவாம். அதற்காக மேஜையின் நாலுகால்களுக்கும் அடியில் தொட்டியில் ஜலம் வைத்தார். 2-3 நாள் ஒன்றும் வரவில்லை. ஜலத்தின் அகலம் ஒரு விரற்கடை தானிருந்ததால், சில செத்துப்போனபோதிலும், அனேகம் எறும்புகள் நீந்திச்சென்று பலகாரத்தைச் சாப்பிட எத்தனித்தன. பிறகு அவர் கால்களுக்குக் கற்பூரத்தைலம் தடவவே எறும்புகளுக்கு வரமுடியாமற் போயிற்று. மறுபடியும் நான்கு நாட் கழித்து பக்ஷணங்களுக்கு எறும்பு வருவதைக் கண்டு, எப்படி வந்ததென்று கண்டு பிடிக்க முயன்றும் முடியவில்லை. கடைசியாய் ஒரு நாள் மேஜைக்கு நேரே மேலே தொங்கிக் கொண்டிருந்த ஒரு கயிற்றிலிருந்து மேஜையின்மேல் எறும்புகள் குதிப்பதைக்கண்டார். தங்களுக்குச் சரியான வழியில்லையாகவே, எறும்புகள் சுவரின்மேல் ஏறிக் கூரைவழியாய்க் கயிற்றிறங்கி மேஜையின்மேல் குதித்துப் பலகாரத்தைச் சாப்பிடவேண்டு மென்று எறும்புக்குத் தோற்றுமானால் அதன் புத்தி வலிமைக்கு அளவு ஏற்படுமா?

தேனீக்களின் சாமர்த்தியம் மிகவும் விந்தைபயக்கத்தக்கது. தேனீக்களின் இராணி தலைமையாய் நின்று மற்றெல்லாவற்றையும் தன் ஆக்ஞாசக்கரத்திற்கு மீறாமல் அடக்கியாண்டு, சோம்பேறி ஈக்களைத் தண்டித்து, பருவத்துக்குத் தகுந்தபடி காலமறிந்து பொருளை ஈட்டிவைக்கும் குணம் ஒன்றினாலேயே

நாம் எவ்வளவோ நன்மைகளும் நீதிகளும் அறிந்து கொள்ளலாமே. நாடக சிரோமணியாகிய ஷேக்ஸ்பியர் தேனீக்களின் கூட்டத்தை, நன்றாயாட்சியமைந்த ஒரு அரசாங்கத்துக்கு ஒப்புமை கூறியிருக்கிறார். தாம் வருந்தி யீட்டிய பொருளைப் பிறர் வௌவ வந்தால் யாருக்குத்தான் கோபமுண்டாகாது. மலைக்காடுகளில், மரங்களின் உச்சியிலும், பாறைகளின் மத்தியிலும், மழை வெயில் என்ற சிரமம் பாராமல் தாங்கள் சேர்த்து வைத்த தேனை, கம்பளியைப் போர்த்தும், தீவட்டியாற் சுட்டும் மனிதர்கள் எடுக்கவரும் போது, கோபமூட்டப்பட்டு ஈக்கள் அவர்களைக் கொட்டிக் கொன்றது கொஞ்சமல்லவே. இவைகளிலும் எறும்புகளைப்போல அடிக்கடி போர்கள் நேர்வதுண்டு. எறும்புகளுக்கு ஈக்கள் ஒருபடியுயர்ந்தவையென்பது, யாதொரு நாகரீகமுமின்றி யெறும்புகள் குழிகளிலும், புற்றுக்களிலும் வசிக்க, தேனீக்கள் வெகு விசித்திரமான கூடுகட்டிக்கொள்கின்றன என்பதினாலேயே விளங்கவில்லையா? அதிலும் இவ்வீடுகட்டுவதில் இன்னபாகம் கட்டுவதற்கு இன்ன ஈ என்று, மனிதர்களில் கொல்லத்துக்காரன், தச்சன் முதலியவர்களைப்போல் வரையறுத்து வைத்திருப்பது எவ்வளவு உசிதமானது பாருங்கள்.

தன் வயிற்றிலிருந்து நூலை வாயினால் இழைத்துக் கூடுகட்டும் சிலந்தியின் சாமர்த்தியம் ஏட்டிலடங்குமா. இதைப்பார்த்து அதிசயித்துத்தான் நமது புராணிகர்கள், திருவானைக்காவிலும், ஸ்ரீகாளத்தியிலும், சிலந்தி பரமசிவனுக்குக் கோவில் சமைத்ததென்று அதற்கு தெய்வத்தன்மை ஏற்றியிருக்கிறார்கள். சிலந்திப்பூச்சியின் புத்திவலிமையை நேரே பார்த்து அறிந்தவர் சொல்லியிருக்கும் கதையொன்றுண்டு. ஒரு தோட்டத்தில் குடிசையின் தாழ்வாரத்தில் ஒரு சிலந்திப் பூச்சி கூடு கட்டியிருந்ததாம். ஒருநாள் பெருங்காற்று ஒன்று அடிக்கவே அந்தக் கூட்டின் கால் ஒன்று அற்றுப்போய் சுருங்கிவிட்டது. சிலந்தி வேறே நூல் நூற்றுக்கட்ட ஆரம்பியாமல் சரசரவென்று கீழேயிறங்கி ஐந்தடியாழத்தில் கிடந்த ஒரு சிறிய சுள்ளியில் ஒரு நூலைக்கட்டி அறுந்த பாகத்திற் கட்டித் தொங்கவிட்டதாம். இப்படிச் செய்ததானது காற்றுக்கு எதிர்த்து நிற்காமல் கூடு ஆடிக் கொண்டிருந்தபோதிலும் பூச்சிக்குச் சரியான இடம் அமைத்துவிட்டது. மறுநாள் யாரோ அந்தக்கோலைத் தள்ளிவிட, அது மறுபடியும் சென்று அதைக்கொணர்ந்து கட்டியது. காற்றுக்காலம் நீங்கவே, எப்போதும் போல் தன்வலையை உறுதியாகக் கட்டியதாம். இதில் எவ்வளவு புத்தி சாதுரியம் வெளிப்படுகிறது!

நாற்றவெண்ணெயின் மோப்பத்தாற் றன் வாலிற் கட்டிய பட்டுநூலை, சிறைச் சாலையிலிருந்த ஒரு தேசாபிமானிக்கு ஒரு பொறிவண்டு சேர்த்ததினால், பட்டு நூலின் மற்ற நுனியிற் கட்டிய பெருங்கயிற்றைப்பற்றி அவன் தப்பித்ததாக ஒரு கதையுண்டு. எறும்பு முதல் இதுவரையிலும் நாம் பார்த்த சீவராசிகளெல்லாம் எலும்பின்றிக் குழலால் ஆன உடம்புகளையுடையகீழ்ச்சாதிக்குச்சேர்ந்தவை. மனிதனைப்போலவே முதுகெலும்புள்ள ஜீவராசிகளின் குணத்தைப்பார்க்கலாம். இந்த வர்க்கத்தில் எல்லா விஷயத்திலும் தாழ்ந்தது மீனினம். மீனினம்உயர்ந்த சாதிக்குச்சேர்ந்ததாயினும் முற்கூறிய குழலினத்தில் எறும்பு. தேனீ போன்ற சில ஜந்துக்களுக்கு புத்தி வலிமையிற்றாழ்ந்ததே. மனிதரிலனேகர் தாம் பெரிய குலத்திற் பிறந்ததினாலேயே தங்களுக்கு புத்தி வலிமையுமுண்டென்று எண்ணுகிறதும் சரியானால், மீனும் எறும்பு முதலியவற்றிற்கு புத்தியிற் சிறந்ததாம். மீனினத்திற்கும் பயம், கோபம், பொறாமை, விளையாட்டு விநோதம் முதலிய குணங்களுண்டு. திமிங்கிலம் முதலிய மீன்களைப் பிடிப்பதில் கப்பல் முதலியவெல்லாமல்லவா தவிடுபொடியாகின்றன. மச்சாவதாரமெடுத்துக் கண்ணன் கடலைக்கலக்கியது நம்மவர் மறப்பரோ?

தவளைகளுக்கு கால வித்தியாசம் வெகு சீக்கிரத்தில் தெரிகிறதென்பது நாமெல்லாமறிந்த விஷயமே. தவளைகள் கத்தினால் மழைவரு மென்பது தவ்றான கொள்கையல்ல. கால வித்தியாசமாகிறதென்று தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி தங்கள் இருப்பிடத்தை யவைகள் மாற்றிக்கொள்ளுகின்றன. ஈரலைத் தனியே வைத்து வந்தேன் என்று சொல்லி வானரத்தை யேமாற்றின முதலையின் கதை நாம் பஞ்சதந்திரத்தில் படித்திருக்கிறோ மல்லவா?

சங்கீத மில்லாதவன் கொலைக்கும் அஞ்சான் என்று ஷேக்ஸ்பியர் சொல்லுகிறார். நாகப்பாம்புக்கோ சங்கீதத்திலுள்ள பிரியம் இவ்வளவு அவ்வளவென்றில்லை. அப்படியிருந்தும் இத்தேசத்தில் பாம்புகடியா லிறப்பவர்கள் கணக்குக்கும் குறைவில்லை. ஆனால் சில தத்துவசாஸ்திரிகள் பாம்புகளுக்கு சங்கீதக் கியானமில்லையென்றும், மீன்பிடிக்க இராத்திரியில் தீவட்டிபோட்டுச் சென்றால் தாங்கள் எப்போதும் காணாதவெளிச்சத்தைக் கண்டு மீன்கள் படகை நெருங்குவதுபோல, பாம்புகளும் தாங்கள் எப்போதும் கேளாத சுரத்தைக்கேட்டு அதிசயித்து ஆடுகின்றன வென்றும் சொல்லுகிறார்கள்.

மீன்களுக்கும், ஊர்வனவுக்கும் அடுத்த உயர்ந்த சாதி: பக்ஷிகள். பக்ஷிகளின் சாதி வெவ்வாறாயினதற்குத் தக்கபடி குணமும் வேறுபடுகின்றது. சாதாரணமாக எல்லாப் பக்ஷிகளுக்கும் ஞாபகசக்தியென் பதுமட்டும் குறைபவே குறையாது. அன்றிப்பக்ஷியின் பிரியத்தைக்குறித்தும், அசுணத்தின் சங்கீத ஞானத்தைக்குறித்தும், நமது கவிகள் சொல்லுமவை யவ்வளவும் நிசமே. பக்ஷிகளின் ஒற்றுமைக்குணம் காக்கையின் கூட்டத்திலேயே விளங்குகிறதல்லவா. மயில்கள் தங்கள் அழகிய சிறகை விரித்தாடுவது கொஞ்சக் கர்வத்தையும் குறிக்கும். கோகிலம் தன் முட்டைகளைக் காக்கையின் கூட்டில் இடுவதொன்றே, ஒரேகாலத்தில் காக்கையின் மூடத்தனத்தையும் குயிலின் சாமர்த்தியத்தையும் விளக்குகிறதே. இது மிகவும் முக்கியமான விஷயமானதால் சமயம் வரும்போது கற்றுக்கொள்ள வேண்டியதவசியமே. ஊர்க்குருவிகள், சிட்டுக்குருவிகள் இவைகளைப் பற்றி நாம் எவ்வளவோ தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறதே.

'ப்ரான்க்லின்' (Franklin) என்னும் ஒரு தத்துவ சாஸ்திரியிடம் இரண்டு கிளிகள் இருந்தன. நான்கு வருஷத்துக்குமேல் அவற்றில் பெண் கிளிக்கு நோய்கண்டு கால் வீங்கிப் போனதால் கீழே யிறங்கி இரையெடுக்க முடியாமற்போயிற்று. ஆண்கிளி தினந்தோறும், தன் மூக்கினால் இரையையெடுத்து ஊட்டி வளர்த்தது. பிறகு அந்த நோய்க் கிளிக்கு உட்காரக்கூட சக்தியில்லாமற் போய் கூட்டில் கீழே கிடந்து புரண்டு கொண்டிருந்தது. ஆனாலும் முன்மாதிரி தண்டில் ஏறியுட்காரவேண்டுமென்ற எண்ணம்மட்டில் பலமாயிருந்தது. ஆண்கிளி அதைத் தன் மூக்கினாற் கௌவி மேலே எடுத்து நிறுத்த முயலும். கடைசியாய் அதுவும் இயலாமற்போயிற்று. கொஞ்சநாளுக்குப் பிறகு அது இறந்து போனகாலத்தில் இது பட்ட வருத்தத்தைக் கண்ணால் கண்டவர்கள் பரிதபிக்கக்கூடியதாயிருந்தது. சிலதினங்களுக்குப் பின் இதுவும் மனம் முறிந்து இறந்ததாம். பக்ஷிகளுக்கு இருக்கும் அன்பு எத்தன்மையது பாருங்கள்.

வாத்துகளின் ஞாபக சக்தியைக் குறிக்க ஒரு கதையுண்டு. ஒரு ஊரில் சந்தையில் தானியம் விற்று வருவதுண்டு; அந்தக் கிராமத்திலுள்ள வாத்துகள் மறுநாள் கீழே யிறைத்துக்கிடக்கும் தானியங்களைப் பொறுக்கித் தின்னவரும். ஒரு தடவை கூடத் தவறாமல் சரியான தினத்திலேயே வந்து கொண்டிருக்கும். இதற்குக்காரணம் முதல் நாள் தானியத்தின் மோப்பத்தாலும், சந்தையின் இரைச்சலாலும் ஞாபகம் வந்து மறுநாள் வரக் கூடும் என்று சிலர் எண்ணினார்கள். இப்படியிருக்க, ஒரு நாள் உற்சவத்துக்காக சந்தை நிறுத்தப்பட்டது. மேற்கூறியது காரணமானால், அடுத்தநாள் வாத்துகள் சந்தைக்குப் போயிருக்கக் கூடாது. அப்படியின்றி மறுநாளும் அவைகள் சந்தைக்கு வந்ததால், ஞாபகசக்தியினாலேயே வந்தனவென்று நிச்சயமாயிற்று. ஆனால் அவை காலத்தை எப்படி யளந்தனவென்று மட்டும் அறிய முடியவில்லை.

(இன்னும் வரும்)

## THE MERCHANT OF VENICE.

## வெனீஸ் வர்த்தகன் சரித்திரக் கவிகள்.

(1) வடதிசையில் வெனீஸென்னும் வளநகரில் மாநிதியால்
[1] வடதிசைப்பா லகனென்ன வாழ்பவன்ஷை லாக்கென்பான்
கடனொருகாற் காசுக்குக் காற்காசு வட்டியென்று
திடமுடன்றாக் திடுங்கொடிய சிந்தனையான் [2] நிந்தனையான்.

(2) அந்தவூ ரினிற்றரும் சிந்தனையாண் செல்வமுளான்
அந்தோனி யாவென்போன் ஷைலாக்கை யடுத்தடுத்து
நிந்தனைசெய் வான்கேட்டு நெஞ்சிலருந் துயரமொடு
நொந்தவனைக் கெடுத்திடவே நோக்கியஷை லாக்கிருந்தான்.

(3) அக்காலம் அந்தோனி யாவிடத்து மனத்தன்பு
மிக்கவன்பஸ் ஸாநியோ போர்ஷியா எனு [3]மாதைத்
தக்கபடி மணம்புரியத் தனக்காறு யிரம்ரூபா
[4] இக்கணமே வேண்டுமென்றான் இவனிடத்தப் பொழுதில்லை.

(4) ஆதலினல் ஷைலாக்கை அடுத்து [5]நிதி கேட்டனரப்
பாதகனீர் என்னைமுன்னம் பலவாறு தூஷித்தீர்
ஏதையா நாயிடத்தில் நிதியென்றான் அந்தோங்யா
[6] ஓதியகல் வார்த்தையினல் உடன்பட்ட ஷைலாக்கு.

(5) கேலியென நீர் மூன்று மாதத்தில் தராவிடில்நும்
மேலொரு பவுன்சதையே வேண்டுமென்றான் சம்மதித்தப்
பாலுடனே உடன்படிக்கை பண்ணி நிதி பெற்றகன்றார்
[7] சீலமுடன் பஸ்ஸாநி யோவுமணம் செய்திருந்தான்.

(6) அந்தோனி யாகப்பல் இன்றுவரும் நாளைவரும்
வந்தவுடன் பணமெடுத்தம் மடையனுக்குக் கொடுப்பமென்று
சிந்தனைசெய் திருந்திடுங்கால் மூன்று[8] மதி செல்போதில்
வந்தகப்பல் கடல்மூழ்கி மாண்ட செய்தி வந்ததுவால்.

(7) இதைஅறிந்த ஷைலாக்கந் தோனியா இருதயத்தில்
சதையறுக்கக் கச்சேரி சார்ந்தசெய்தி தனைத்தெரிந்து

---

1 வடதிசைபாலகன்=குபேரன். 2 நிந்தனை=பழிப்பு. 3 மாது=பெண். 4 இச்சணம்=இந்தநிமிஷம். 5 நிதி—திரவியம். 6 ஓதிய=சொல்லிய. 7 சீலம்=அன்பு. 8 மதி=மாதம்.

பதைபதைத்துப் பஸ்ஸானி யோ[9] மனையாட் குரைத்திடலும்
நிதிபலஆ யிரமெடுத்து நீகொடுத்துக் காவென்றாள்.

(8) அங்கிருந்த கிரேஷியானி யோவென்போ னையுங்கூட்டி
இங்குவந்தான் ஷைலாக்கு மாமிசமே வேண்டுமென்றான்
எங்குமில்லாப் பெரும்பாவி இவ்வனென்றிவ் விருவோரும்
பொங்குநெருப் பினில்விழுந்த புழுப்போலத் துடித்திருந்தார்.

(9) இருந்திடுங்காற் போர்ஷியா எனுமாது மிகத்தெளிந்து
திருந்தியதன் [10]மதியாலோர் முடிவுசெய்து வக்கீல்போல்
வரிந்தவுடை தரித்தோரு வக்கீல்கடித மும்பெற்றுப்
பொருந்துநிரீ ஸ்ஸாகுமஸ்தா போலவரும் படிபுரிந்து.

(10) அந்தநியா யஸ்தலத்தை அடுத்தெதிரி பக்ஷத்தில்
வந்தவக்கீல் என்றுவழக் குரைத்துப்பத் திரப்படியே
தந்திடுதல் சரியெனினும் ஷைலாக்நீ தயவுசெய்தே
இந்தநிதி தனைக்கைக்கொண் டேயிவனைக் காவென்றாள்.

(11) என்சொலியும் கேட்டிலன்—ஞாயாதிபதி பத்திரத்தில்
முன்சொன்ன படிசெயலே முறையென்றார்—நடுங்காமல்
வன்சொலுறும் கொடும்பாவி ஷைலாக்கோர் கத்திகொண்டே
இன்சொலுறும் அந்தோனி யாசதையை அறுக்கவந்தான்.

(12) அப்பொழுது நில்லென்று போர்ஷியா ஆகும்வக்கீல்
இப்பொழுதெவ் வளவுதசை எடுத்திடுவாய்? எனக்கேட்டாள்.
ஒப்பந்தப் படியென்றான். ஒருதுளியாயினுமிரத்தம்
குப்புற வீழ்ந் திடுமாயிற் கொல்லுமுனைச் சட்டமென்றாள்.

(13) ரத்தம்வரா மற்சதையை யாரெடுப்பார்? என்றுரைத்தான்,
பத்திரத்தில் ரத்தம்வரும் படியெழுத வில்லையென்றாள்,
மெத்தமயங் கிப்பணமே வேண்டுமென்றான், தந்திடவே
ஒத்தவரைத் தடுத்துநிதி உனக்கெழுத இல்லையென்றாள்.

(14) யூதனெவன் ஆயினும்ஓர் கிறிஸ்தவனைக் கொல்லஎண்ணிற்
சாதலுறு வான்அந்தச் சட்டமுனக் கெய்துமென்றாள்.
ஆதலினல் நீதிபதி அவனைத்தண் டித்தபின்பு
[11]மேதகுபோர் ஷியாமாது [12]மீண்டுதன்னூ ரினையடைந்தாள்.

9 மனையாள்—பெண்சாதி. 10 மதி—புத்தி. 11 மேதகு—பெருமையுள்ள. 12 மீண்டு—திரும்பி.

## SOME DETAILS ON THE KINDERGARTEN METHODS.

## கிண்டர்கார்டனைப்பற்றிப் பின்னும் சில விவரங்கள்.

கிண்டர்கார்டன் என்பது இல்லத்துக்கும் பள்ளிக்கும் நடுவிலுள்ள ஸ்தானத்ததாய் சிறு குழந்தைகள் இல்லப்பயிற்சிக்குமேல் பள்ளிப் பயிற்சி பெறுவதற்கு அனுசரணையாய் அவர்களுடைய தேகமனோபாவங்களை யறிந்து அவைகளை நல்வழியில் செலுத்தி அவர்களுடைய தேகம், புத்தி, ஆத்மா மூன்றும் ஒன்றை யொன்றனுசரித்து நல்வழியில் விர்த்தியடையப் பார்த்துவரும் ஸ்தாபனமாமென்று இதற்குமுன் சொல்லியிருப்பதால் விளங்கும். "தொட்டிற் பழக்கம் சுடுகாட்டுமட்டும்" என்று நமக்குள் சொல்வதுண்டு. இது ஓர் மகத்தான உண்மையை விளக்கும் வாக்கியம். இப்படிப்பட்ட காலத்தில் சிறு குழந்தைகளுக்குப் படியும் பழக்கம் பின்னால் அவர்கள் சாகுந்தனிலும் அவர்களை ஒட்டிநிற்குமாதலால் இப்படிப்பட்டகாலத்தில் அவர்களுக்கு கெட்டவழக்கங்கள் படியாதபடிப் பாதுகாத்து நல்ல பழக்கவழக்கங்கள் படியும்படிக்கும் நல்ல எண்ணங்கள் உண்டாகும்படிக்கும் செய்ய வேண்டியது எவ்வளவு முக்கியமும் அவசியமுமான கடமை. இக்கடமையை நிறைவேற்றற் கேற்பட்ட சாதனமே கிண்டர்கார்டன் என்பது. மேலேசொல்லிய பழமொழியிலடங்கிய உண்மையை முற்றும் கிரகித்துணர்ந்தே 'ப்ரோபெல்' என்னும் ஜர்மனி தேசத்து மகா வித்வான் குழந்தைகளைச் சரியாய்ப் பயிற்சி செய்யும் இம்முறையைக் கண்டுபிடித்து அதற்குக் கிண்டர்கார்டன் என்று பெயர் கொடுத்தார். குழந்தைகளுக்கு பாலசிக்ஷை செய்து பிரதமத்தில் வித்தை போதிப்பது நாகரீக வித்தையெல்லாவற்றிலும் சிறந்த வித்தை. இதையுணராது இத்தேசத்தில் சொற்பவித்தை கற்றவர்களெல்லாம் பள்ளிக்கூடம் போட்டு சிறுவர்களுக்கு வித்தை போதிப்பதாகக் கிளம்பிவிடுகிறார்கள். இதனால் விளையும் கெடுதல் கொஞ்சநெஞ்சமில்லை. பாலப்பருவத்தில் தகுதியற்ற வாத்தியாயர்களால் போதிக்கப்படுவது. அப்படி போதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும், அக்குழந்தையைச் சேர்ந்த குடும்பத்தோருக்குமட்டும் தீங்குவிளைப்பதாயின்றி ஜனசமூகத்துக்கே தீங்குவிளைப்பதாயிருக்கிறது. ஏனெனில் குழந்தை யெப்படியோ அப்படியே மனிதனுமாகிறான். பாலப்பருவத்தில் நல்லவழியில் திருப்பப்படாத புத்தி பிந்தி ஒருபோதும் நல்லவழிக்குவராது. இப்படிப்பட்டவர்கள் தான் பிந்தி, குற்றஞ்செய்வோர்களாகிறார்கள். சிறுபிராயத்தில் ஒருகெட்ட குணம் அல்லது கொள்கை குழந்தையின் மனதில் படியவிட்டோமானால் அது பிந்தி கப்பும் கிளையுமாகப் பரவிச்செழித்து அளக்கமுடியாத கெட்டபலனைத்தரும். பிரதமவித்தியாசாலையில் நல்ல பலன் கிடைக்கவேண்டுமானால் பிரதம போதம் செய்யும் உபாத்தியாயர் தேகம், புத்தி, ஆத்மா மூன்றையும் நல்வழியிற் செலுத்தி விர்த்திக்குக் கொண்டுவருவதற்குத் தக்கயோக்கியதை யமைந்தவராக விருக்க வேண்டும். இது முற்றும் தானாக அமையக் கூடியதல்ல. சுபாவபுத்தி எவ்வளவுதான் அனுகூலம் செய்யக்கூடியதாயிருப்பினும் அது அவ்வேலைக்கு வேண்டிய வழியில் நன்றாகப் பழக்கிச் சீர்ப்படுத்தாவிடில் காரியத்தில் பயன்படாதொழியும். எந்தத்தொழிலும் கொஞ்சக்காலம் சிரமப்பட்டு முறையறிந்து கற்றுப் பழகினவருக்கே குறைவின்றி முற்றும் கையாடவரும். குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லுவிக்கும் வேலை மற்றத் தொழில் வித்தைகள் எல்லாவற்றிலும் அதிக நுட்பபத்தியும் சாமர்த்தியமு முபயோகிக்க வேண்டிய பெரியதொழில் வித்தையாதலால் அவ்வேலையிலமர்வோர் அதற்கு வேண்டியபடி பழக்கப்படாமல் அவ்வேலையிலமர்வது தீங்குக்கிடமேயாமன்றி வேறுபயன்தராது என்பது நிச்சயம். சீர்ப்பட்ட ஜனசமூகத்தில்

ஜனக்ஷேமத்தை நாடியுழைக்கும் ஸ்தாபனங்கள் மூன்று. மதஸ்தாபனங்கள் ஜனங்களுடைய மதக்ஷேமத்தை, யதாவது, ஆத்மலாபத்தை நாடியுழைத்துவருவன. துரைத்தனம் அல்லது இராஜாங்கங்கள் ஜனங்கள் தேகக்ஷேமத்துக்கு வேண்டியவைகள் யாவற்றையும் நாடியுழைத்துவருவன. வித்தியாஸ்தாபனங்கள் ஜனங்களின் புத்திவிர்த்தியை நாடியுழைத்துவருவன. இம்மூன்று ஸ்தாபனங்களும் வெளிக்கு வேறுபட்டிருந்தாலும் இவைகளெல்லாம் ஒத்துழைத்து மனுஷன் மூன்று விதத்திலும் விர்த்தியடைந்து வந்தாலன்றி அவனுக்கு பூர்ணசுகம் சித்திப்பது துர்லபம். இம்மூன்று ஸ்தாபனங்களும் தங்கள் வேலையைச்சரிவர நடத்துவதற்கு அஸ்திவாரமாகவிருப்பது குழந்தைகளின் பிரதமப் பயிற்சி. ஆகையால் குழந்தைகளைப் படிப்பிக்கும் வகையில் அல்லது பிரதமவித்தை விஷயத்தில் மிகுந்த பாடுபட்டு அத்துறையில் எவ்வளவு நன்றாகவுழைப்பது சாத்தியமோ அவ்வளவும் நடக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டியது மனுஷஜாதியின் ஆத்ம க்ஷேமத்திற்கும் தேக மனோவிர்த்தி க்ஷேமத்துக்கும் இன்றியமையாததாயிருக்கிறதென்று ஏற்படுகிறது. மேலே சொன்ன மூவகை ஸ்தாபனங்களும் மற்ற விஷயங்களில் தங்கள் கடமைகள் என்னதான் வேறுபட்டிருப்பதாகப் பாவித்தாலும் குழந்தைகளுக்குப் பிரதம வித்தைபோதிக்கும் விஷயத்தில் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டியதவசியமென்பதை யொத்துக்கொண்டிருக்கின்றன. பிரதம வித்தையில் அதிக பொறுப்போடு நம்மாலான முயற்சியெல்லாம் செய்து மிக்க பாடுபட்டுழைக்க வேண்டிய தவசியமென்று ஒப்புக்கொண்டாலும் கிண்டர்கார்டன் ஸ்தாபனங்களிலுள்ள சிலாக்கியமென்னவென்றால், அது குழந்தைகளின் மேலான குணங்களை விர்த்திசெய்கிறது. அழுக்குப்படாத, தொட்டால் ஒட்டிக்குந் தன்மையுள்ள குழந்தைமனதில் சன்மார்க்க தத்துவங்கள் பதியச்செய்கிறது. அங்கே குழந்தைகள் மனதிலுண்டாகும்படி செய்யப்படும் எண்ணங்களும் நினைவுகளும் மனதை மேனோக்கிக்கொண்டு போவதோடு பின்னால் சகவாசதோஷத்தால் தெரியவரக்கூடிய துன்மார்க்க எண்ணங்களெல்லாம் எதுவும் நன்றாகப் பதியும் அக்காலத்தில் அவர்கள் மனதில்புகவிடாமல் தடுக்கத்தக்கவையாகவிருக்கின்றன. சிறு பிராயத்திலே கிண்டர்கார்டன் முறையினால் கை, கால், உறுப்புகளும் தேகமும் இலகுவாகவும் அழகாகவும் இயங்கப்பழக்கப்படுகின்றன. கிண்டர்கார்டன் வேலையினால் நேர்த்தியான கைப்பழக்கம் உண்டாகிறது; கண்களுக்கு எதையும்பார்க்க ஆயத்தமான சக்தியும், நுட்பசக்தியும் உண்டாகின்றன. மனோபாவசக்திக்கு பலம் உண்டாகிறது. கிண்டர்கார்டன் விளையாட்டுகளும் ஆட்டங்களும் காலத்தைப்பற்றி நுட்பமான எண்ணமும், சங்கீத உணர்ச்சியும், குணமும் பிறருக்காகச் சிந்தனைசெய்யும் குணமும், எதனிடத்திலும் நல்லெண்ணம் பாராட்டுந் தன்மையும் உண்டாகச்செய்கின்றன. சாப்பாட்டு வேளையில் நன்றாய்ப் பழகின கிண்டர்கார்டன் வாத்தியார் கூடவிருந்து பார்த்துவந்தால் குழந்தைகளுக்கு நல்ல மாதிரிபடியும்; அந்நியோன்னிய சுபாவமும் தன்னிடத்துள்ளதைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்துண்ணும் குணமும் உண்டாகும். கிண்டர்கார்டன் ஸ்தாபனத்தில் பழகின குழந்தை தன்னயம் பார்க்கிற குணமுடையதாயிருக்கமுடியாது. இவ்வகை குணங்களும் இன்னுமிவைபோன்ற சத்குணங்களும் விர்த்தியாகப் பார்ப்பதோடு தேக சௌக்கியமும் கட்டழகும் விர்த்தியாகும்படி பார்த்துவரவேண்டுமென்பதே இந்த கிண்டர்கார்டன் முறையின் நோக்கமெல்லாம். கிண்டர்கார்டன் ஸ்தாபனத்தில் குழந்தைகளைச் சுற்றியுள்ளவைகள், வேலைசெய்யும் வகைகள், குழந்தைகளுடைய மனநிலை இவையெல்லாம் மேலே சொன்ன பூர்ணபலன் சித்திக்க உதவிசெய்யும் சாதகங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இம்முறைப்படி, பாலர்களின் விசாரபுத்தியை விருத்திசெய்து பகுத்தறிவை வளரச் செய்தலைப்பற்றி இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறோம்.

## DEATH OF DADABHAI NAOROJI. INDIA'S GRAND OLD MAN.

## ஸ்ரீ மஹான் தாதாபாய் நௌரோஜியின் தேஹ வியோகம்.

இந்தியாவில் வயதிலும் புத்தியிலும், மேன்மையிலும், கண்ணியத்திலும், ஊருக்குழைப்பதிலும் உத்தம புருஷனாய் விளங்கி 92-வயதுவரையில் ஜீவித்திருந்து கடைசிவரையில் தன் தேச க்ஷேமத்தை மறவாமலிருந்துவந்த ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியவர்கள் சென்ற ஜூன்மாசம் 30 தேதி சனிக்கிழமையன்று சாயங்காலம் 5-மணிக்குத் தேஹவியோகமானார். இவர் 1825-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 4 தேதி பம்பாய் நகரத்திலே ஒரு எளிய பார்ஸி குடும்பத்தில் பிறந்தவர். நாலாவது வயதில் தனது பிதாவை யிழக்கும் தௌர்ப்பாக்கியம் பெற்றுத் தன் தாயினால் படிக்கவைக்கப்பெற்று முன்னுக்குவந்தவர். பம்பாய் எல்பின்ஸ்டோன் இன்ஸ்டிடியூஷனில் பணஉதவிபெற்ற மாணாக்கராய்ப் படித்துத் தேறி 1845-ம் வருஷத்துக்குள் இந்தியாவில் படிக்கக்கூடிய அளவு படித்து முடித்துவிட்டார். அப்பொழுது பாம்பாயில் சீப் ஜஸ்டிஸாயிருந்த ஸர் எர்ஸ்கின் பெர்ரி என்பவர் நௌரோஜியின் புத்திசாமர்த்தியங்களைக்கண்டு வியந்து அவரை பாரிஸ்டர் பரீக்ஷைக்கு வாசிக்க இங்கிலாந்துக்கு அனுப்ப உத்தேசித்தும் அது பலிக்காமற்போயிற்று. 1850-ம் வருஷத்தில் இவர் படித்த வித்தியாசாலையில் தானே ஒரு போதகராக நியமனம்பெற்று 1854-ம் வருஷத்தில் அந்த எல்பின்ஸ்டோன் காலேஜில் தானே ஒரு பிரதமபோதகராகும் பதவிபெற்றார். 1856-ம் வருஷத்தில் அவர் அவ்வேலையைவிட்டு ஒரு பெரிய கம்பெனியின் ஏஜண்டாக லண்டனிலிருந்து வேலை பார்த்துவர நியமனம் பெற்றுச் சீமைக்குப் போய்விட்டார்.

இடையிலுள்ள 10 வருஷகாலங்களில் (1845-1855) அவர் பம்பாயில் சமஷ்டிசேவையார்த்தம் சமுதாய நன்மைக்காகப் பல துறைகளிலிறங்கி யுழைத்துவந்தார். பல பெண் பாடசாலைகளையும் இதர ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தி நடத்திவந்தார். இங்கிலாந்துக்குச் சென்றபிறகு இந்தியாவின் ராஜ்ய க்ஷேமவிர்த்தியை நாடியும் இந்தியர்களுக்கு அதில் சாய்காலுண்டாவதற் கனுகூலமாகவும் எவ்வளவோ பாடுபட்டு உழைத்துவந்தார். இவருடைய அபார முயற்சியினால் இவர் பார்லிமெண்டு சபை மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பெற்று அங்கேயும் அதற்கு வெளியிலுமாக நெடுங்காலம் உழைத்துவந்ததின் பலனாக இந்திய ஸிவில் ஸெர்விஸ் பரீக்ஷையை இங்கிலாந்திற்போல் இந்தியாவிலும் அதற்குச் சரியாக நடத்தி வரவேண்டுமென்று பார்லிமெண்டு சபையில் பிரேரேபித்து அந்தப்படியே அவர்கள் தீர்மானமும் செய்யும்படி செய்தார். அப்படி இடைவிடாதுழைத்து ஜயித்தும் கவர்ன்மெண்டார் காமன்ஸ் சபையார் தீர்மானத்தையும் நிறைவேற்றாது போட்டுவிட்டார்கள். இதைப்பற்றி இவர் 1906-ம் வருஷம் மூன்றாவதுமுறை காங்கிரெஸ் ப்ரெஸிடெண்டாக கல்கத்தாவில் கூடிய அம்மஹாசபையின் அக்கிராசனம் வகித்துப் பேசியபொழுது மிகு வருந்தி முறையிட்டுக்கொண்டார். முறையிட்டுக்கொண்டாலும் சித்தம் கலங்கவில்லை. அஞ்சாதநெஞ்சினர். அபூர்வதிறத்தினர். விடாமுயற்சியுடையவர். "முயற்சி திருவினையாக்கும்" என்பதில் அத்யந்தபக்தியுள்ளவர். அதை யனுசரித்து ஆயுஷ்காலமுழுவதும் ஒழுகினவர். அப்பேர்ப்பட்டவர் 70 வருஷகாலமாக இந்தியாவுக்கு இடைவிடா துழைத்துவந்தார். அவருடைய முயற்சி விசேஷத்தைவிட அவருடைய அனுபவ விசேஷம் பெரியது. நல்லது பொல்லாதிரண்டுக்கும் ஈடுகொடுத்துத் தேர்ந்தவர். உத்தமகுணசீலர். எதிரியை மனம்நோகாது கண்டித்துப்பேச வல்ல சாதுரியமுடையவர். "சத்தியம் வத: ஹிதம்வத" என்னும் மஹா வாக்கியத்தை யனுசரித்து பிறரைக் கண்டித்துப் பேசும்போ

தும் அவர் துவேஷங்கொள்ளாதபடி உண்மையை ஹிதோபதேசமாகப் பேசவல்லவர். 1855-ம் வருஷம் முதல் 1869-ம் வருஷம் வரையில் இவர் இங்கிலாந்திலிருந்தார். இடையிலே 1862-ம் வருஷத்தில் ஒரு ஹிந்து நண்பருக்கு உதவிசெய்யப்போகத் தானும் அவருடன் முழுகிப்போகும்படியான ஸ்திதிக்கு வந்துவிட்டார். ஆயினும் அவருடைய நாணய மிகுதியினாலும் நற்குணச்சிறப்பினாலும் எல்லாருடைய பிரீதியையும் சம்பாதித்து கடன்காரர்களுக் குரியதைக் கொடுத்துத் தீர்த்துச் சமாளித்துக் கொண்டுவந்தார்.

1869-ம் ஆண்டில் அவர் பம்பாய்க்குத் திரும்பி வந்தாராயினும் உடனே இங்கிலாந்திற்குத் திரும்பிப்போகும்படியாக நேரிட்டது. இந்தியாவின் அரசிறை விசாரணைக் கமிட்டிமுன் சாக்ஷியம்சொல்ல அவரை அழைத்திருந்தார்கள். அவர்கள் முன் இந்தியாவுக்கு அனுகூலமாக வெகு திறமையோடு சாக்ஷி சொன்னார். அவருடைய சாமார்த்திய விசேஷத்தினால் இந்தியா எல்லாத் தேசங்களிலும் மிக ஏழமையான தேசமென்றும் வரும்படி தலைக்குச் சராசரி ரூ. 20 - ம் ஒரு வருஷத்திற்கிடைப்பதாயில்லையென்றும் இது சாப்பாட்டுக்கே போதாதென்றும் வற்புறுத்திக் கூறி ருசுவும் காட்டி ஸ்தாபித்தார்.

அங்கே 5 வருஷங்கள் இருந்தபின் 1874-ம் வருஷத்தில் பரோடா திவானாக வந்து சேர்ந்தார். அந்நாட்டில் அவர்செய்த சீர்திருத்தங்கள் எல்லாராலும் மெச்சிக்கொண்டாடப்பட்டன. அந்தப் பதவியிலும் நீடித்திருக்க மனம் பிடிக்காமல் அந்த வேலையை ராஜினாமா கொடுத்துவிட்டு பம்பாயில் தானே பல வருஷம் வசித்துவந்தார். இந்தியாவிலிருந்து உழைப்பதைவிட இங்கிலாந்திற்குச்சென்று அங்கேயுள்ள பார்லிமெந்து மஹாசபையில் மெம்பராகச்சேர்ந்து உழைக்கவேண்டியவேலை நிரம்ப இருக்கிறதென்று 1885-ம் வருஷம் அவர் பின்னும் சீமைக்குச்சென்றார். 1886-ம் வருஷத்துப் பொது எலெக்ஷன் காலத்தில் லண்டனின் ஒரு பாகமான ஹால்பர்ன் என்னும் வட்டத்துக்கு அவர் பார்லிமெந்து சபை மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பெறப் பிரயாசைப்பட்டார். அது பலிக்காமற்போகப் பிறகு 1892-ம் வருஷத்தில் பின்ஸ்பரி மாகாணத்துக்கு பார்லிமெந்து மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படலானார். பார்லிமெந்து சபை மெம்பராகவிருந்து அவர் இந்தியாவுக்கனுகூலமாகச் செய்த வேலைகள் அனந்தம். அவைகளைக் கணக்கிட்டு முடியாது. 1895-ம் வருஷத்தில் நடந்த பொது எலக்ஷனில் அவர் மெம்பராகவர முயன்றும் பலிக்காது தோற்றுப்போயினர். ஆயினும் அவர் சளைக்கவில்லை.

இந்தியாவில் கூடிய காங்ரெஸ் மஹாசபைக்கு அவர் மூன்றுதரம் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்படலானார். கடைசித் தடவை 1906-ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்ரெஸ் சபையில்தான் அவர் தனது அனுபவத்தையெல்லாம் குறிப்பிட்டுச்சொல்லி இந்தியாவுக்கு ஸ்வராஜ்யாக்கியம் என்கிற ஜன ஆட்சி சித்தித்தாலன்றி இந்தியாவின் குறைகள் தீராவென்று கல்லும் கரைந்துருக வற்புறுத்திப் பேசினார். அவர் 10 வருஷங்களுக்குமுன் போட்ட வித்தே இப்பொழுது மரமாக வளர்ந்து இருக்கிறது. காங்ரெஸ் சபையாரும் முஸ்லீம் மஹாசபையாரும் போனவருஷம் இந்தியாவுக்கு ஜன ஆட்சி சித்திக்க திட்டமாக இன்ன இன்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். அந்த திர்மானத்தை யனுசரித்தே இந்தியாவுக்கு ஜன ஆட்சி சித்திப்பதற்கான சபைகள் எங்கும் ஏற்பட்டு உழைத்து வருகின்றன. 1902-ம் வருஷத்தில் அவருடைய வியாசங்கள் பிரசங்கங்கள் புஸ்தகங்களை யெல்லாம் சேர்த்துத் திரட்டி ஒரு பெருநூலாகப் பிரசுரித்தார். அது இன்னும் சிலாக்கியமாகக் கொண்டாடப்படுகிறது.

இப்படியாகச் சுமார் 50 வருஷகாலம் இந்

தியாவின் மேன்மைக்காகப் பாடுபட்டுழைத்து விட்டு வயோதிகம் மேலிட பம்பாயில் தானே வசிக்கலுற்றார். சரீரபலம் குறைந்து தளர்ந்தாலும் மனோபலமும் திடமும் கடைசி வரையில் குன்றவுபடவேயில்லை. அவருடைய 80-வது வயதில் அவருக்கு மூப்பு மேலிட்டு தேகபலம் மிகக் குன்றிப்போக அவர் அது முதல் பம்பாய்க்கருகிலுள்ள வார்ஸோவா என்னும் கிராமத்தில் வசித்துவந்தார். பிரதி வருஷம் செப்டெம்பர்மீ 4௨ அவருடைய பிறந்தநாள் தேசமெங்கும் கொண்டாடப் படும்பொழுது அவர் அங்கிருந்து ஜனங்களுக்கு புத்திமதிகூறி நல்வசனமுரைப்பார். அந்த புத்திமதி வார்த்தைகள் மிகச் சிறந்தவையாக விருக்கும். இந்தியாவில் ஹிமாலயம் முதல் கன்னியாகுமரிவரையில் அவருடைய பேரையும் கீர்த்தியையும் அவருடைய தேச சேவையையும் கேட்டுக் கொண்டாடாதவர் ஒருவருமில்லை. அந்த மஹான் அவருடைய 92-வது வயதில் முதிர்ந்த பழம் உதிர்ந்து விழுவதுபோல் தேஹத்தை விட்டுப் பரலோகப்பிராப்தி யடைந்தார். 1906-ம் வருஷம் அவர் காங்ரெஸ் ப்ரெஸிடெண்டராகச் செய்த பிரசங்கத்தில் ஆணித்திறமான சில வார்த்தைகளை ஜனங்கள் தங்கள் மனதில் இருத்தி இன்றைக்கும் என்றைக்கும் அதை மறவாமல் உழைத்துவரக் கடமைப்பட்டவர்களாகக் கருதியிருக்கிறார்கள். அவருடைய அந்த உத்தம உபதேசம் இது :—

"நான் ஆதியில் முயற்சி எடுக்க ஆரம்பித்தது முதல் எத்தனையோ ஏமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் எவனுடைய மனதும் அதைரியமடையும்படி செய்திருக்கக் கூடியவை. எனக்குநேர்ந்த ஏமாற்றங்கள் சாதாரணமானவையல்ல; சாதாரணமாக ஒருமனிதன் ஒரு விஷயமாய்ப் போராடி, தோற்றுப் போவானாகில் அவனுக்கு ஏமாற்றம் உண்டாகும். ஆனால் அநேகம் சமயங்களில் நான் வெற்றியடைந்தும், அந்த வெற்றிகளின் பலனை நான் அடையமுடியாமல், நிர்வாக அதிகாரிகள் செய்துவிட்டனர். இவைகள் மனதை உடைத்துவிடக் கூடியவை. ஸ்டாச்சுடரி ஸிவில் ஸெர்விஸ், சமகாலப் போட்டிப் பரிட்சை, வெல்பி கமிஷன் முதலிய பல விஷயங்களில் நான் ஜயமடைந்தேனாயினும், காரியம் பலிக்காமல் நிர்வாக அதிகாரிகள் செய்துவிட்டனர்.

"ஆனால் நான் தைரியத்தை இழந்துவிடவில்லை. தைரியத்தை இழந்துவிடாமலிருந்தது மாத்திரமல்ல, இப்பொழுது நம்பிக்கையுடனும் உங்கள்முன் நிற்கிறேன். நான் தைரியத்தை இழக்காததற்கும் காரணமுண்டு, நம்பிக்கையுடனிருப்பதற்கும் காரணமுண்டு. விடாமுயற்சி வேண்டுமென்கிற கோட்பாடே நான் தைரியத்தை விடாததற்குக் காரணம். சிறிதோபெரிதோ எந்தக் காரியத்தில் நீங்கள் இறங்கினாலும் விடாமுயற்சி வேண்டும். ஏமாற்றம் உண்டானாலும் நடுவில் நின்றுவிடக் கூடாது ; நின்றுவிட்டால், ஏற்கெனவே அடைந்த லாபமெல்லாம் போய்விடும் ; மறுபடி ஆரம்பம் செய்வது கஷ்டமாயிருக்கும். அந்தந்த நிலைமைக்குத் தகுந்த முறையை நாம் அனுசரிக்கலாமாயினும், முடிவு வரையில் விடாமுயற்சிவேண்டும். நம்முடைய கட்சி நியாயமானதாகையால், முடிவில் அது வெற்றியடையும். ஆகையால் தான், நான் தைரியத்தை விட்டதில்லை. அநேகம் ஏமாற்றங்களை நான் அனுபவித்திருந்தும் இந்த சமயத்தில் எனக்கிருக்கிற நம்பிக்கைக்குக் காரணமென்னவென்றால், ப்ரிட்டிஷ் ராஜ தந்திரகளுடைய மனதில் சுவாதீனம் முதலிய ப்ரிட்டிஷ் ஜாதியின் கொள்கைகள் புனர் ஜன்மமடைந்து வருகின்றதேயாம்." இவருடைய உத்தம குணங்களையும் சிரேஷ்டமான நடத்தைகளையும் நன்கு மதித்து பம்பாய் யூனிவர்ஸிடி சங்கத்தார் இவருக்கு எல். எம். டி. பட்டம் கொடுத்து கௌரவித்தார்கள்.

## ON THE EDUCATIONAL NEEDS OF WOMEN.

(By PANDIT KUMARI LAJJAVATHI.)

## நமது தேச ஜனங்களின் கல்வி சம்பந்தமான தேவைகள்.

பண்டித் குமாரி லஜ்ஜாவதியின் பிரசங்கம்.

பஞ்சாப்பைச் சேர்ந்த ஜலந்தரிலிருக்கும் கன்யா மஹா வித்யாலயத்தின் கௌரவ லேடி பிரின்ஸிபாலான ஸ்ரீமதி பண்டித் குமாரி லஜ்ஜாவதி லாகூரிலிருக்கும் பிராட்லா ஹாலில் 7000 பேர்களடங்கிய ஒரு பெரிய சபையில் சென்ற செவ்வாய்க்கிழமையன்று ஒரு உபந்யாசஞ் செய்தார்.

ராஜா நரேந்திரநாத், எம். ஏ., அக்கிராசனம் வகித்து அடியில் வருமாறு பேசினார்:—இந்த கன்யா மஹாவித்யாலயம் 1886-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இக்காலேஜ் இவ்வளவு பிரபலமாய் விளங்கி வருவதற்குக் காரணம் ஸ்ரீமதி லஜ்ஜாபாயின் அக்கரையேயாகும். இந்த வித்யாலயத்தில் லௌகிகப் படிப்புடன் ஆரிய சமாஜத்தின் முறைகளின் படி மதசம்பந்தமான படிப்பும் கற்பிக்கப்பட்டு வருகிறது. மதப்படிப்பை புருஷர்களைவிட, ஸ்திரீகளுக்குக் கற்றுக் கொடுப்பது நிரம்ப அவசியமாகும். மதப்படிப்பு இல்லாததினால் உண்டாகும் குறைகள் புருஷர்களிடத்தில் காணப்படுவதைவிட ஸ்திரீகளிடத்தில் அதிசீக்கிரமாய் விளங்கும். நமக்கு கௌரவம் கொடுப்பவர்கள் ஸ்திரீகளே. கிரககிருத்திய காரியங்களைச் சரிவர நடத்துவதில் அவர்கள் வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். ஸ்திரீகளுக்கு ஏதேனும் குறைகள் ஏற்பட்டால், அவைகளை அவர்கள் அதிக நுட்பமாக உணருகிறார்கள். ஸ்திரீகளுக்கு ஆபரண அழகைக் காட்டிலும் நல்லொழுக்க அழகே அழகாகும். நல்லொழுக்கங்கள் புருஷர்களைவிட ஸ்திரீகளிடத்தில் அதிகமாக இருக்கவேண்டும். நல்லொழுக்கப் படிப்பை ஸ்திரீகளுக்குப் போதிப்பதே இந்த கன்யா மஹா வித்யாலயத்தின் நோக்கமாகும். ஸ்திரீகளுக்குப் பிரயோஜனப் படும்படியான விஷயங்களைக் கற்றுக் கொடுப்பதில் இந்த வித்யாலயத்தைப்போன்ற புராதன வித்யாலயம் வேறொன்றுமில்லை. இதைப்போன்ற பிரபலமான வித்யாலயம் சென்னையிலாவது பம்பாயிலாவது இல்லை இதற்கு உயிர்கொடுத்து இவ்வளவு தூரம் பிரபலமாய் விளங்கும்படிச் செய்தது லாலாதேவ ராஜ் என்பவர் தான். தவிரவும், ஜலந்தர் வாசிகளும் இந்த வித்யாலயத்தின் அபிவிருத்தியைப்பற்றி நிரம்ப அக்கரை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த மஹா வித்யாலயத்தில் பெண்களுக்கு மதசம்பந்தமான படிப்பைக் கற்றுக்கொடுப்பதினால் இதற்கு ஜனங்கள் பண உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன் என்று பேசி முடித்தார்.

கன்யா மஹா வித்யாலயத்தின் கௌரவ லேடி பிரின்ஸிபாலான குமாரி லஜ்ஜாவதி பேசின பேச்சின் சாராம்ஸம் அடியில் வருமாறு:—பெண் கல்வி யபிவிருத்தியானால் தான் இந்தியாக்ஷேமமடையும். இந்தியா பல வழிகளில் அபிவிருத்தி யடைந்துவரும் இக்காலத்தில் ஸ்திரீகளின் கல்வியைப்பற்றி இன்றைபதினம் கொஞ்சம் சொல்லத் துணிகிறேன். ஸ்திரீகளின் படிப்பைப்பற்றி பரிகாசம் பண்ணிவந்த காலம் போய்விட்டது. சென்ற 20 வருஷ காலமாக பஞ்சாப்பில் பெண்கல்வி அபிவிருத்தி யடைந்து வருகிறது. ஆனால் அபிவிருத்தி நிரம்ப மெதுவாக இருக்கிறது. வீட்டுக்காரியங்கள் சந்தோஷகரமாகவும் சுகமாகவும் நடந்து வரவேணுமானால் ஸ்திரீகளும் புருஷர்களும் படிப்பில் சமமாக அபிவிருத்தி யடைந்திருக்கவேண்டும். ஸ்திரீ புருஷர்களில் உயர்வுதாழ்வு என்றபேதம் கூடாது. கிரக கிருத்தியம் என்ற படகை நடத்தும் ஸ்திரீ புருஷர்களில் யாராவது ஒருவர் மற்றவர்களைவிட பளுவாக இருந்தால் அப்படகு மூழ்கிப்போகும். ஆண் குழந்தைகளுக்கு படிப்பைக் கொடுத்துவரும் மனிதர்கள் அவர்களுடைய பெண்குழந்தைகளை மறந்துவிடக்

கூடாது. படிப்பினால் ஸ்திரீகள் யாதொரு பயனையும் அடைந்ததாகக் காணோம் என்று சிலர் சொல்லுகிறார்கள். வேத சாஸ்திரங்களில் ஞானத்திலும் ராஜ்ஜியங்களை நிர்வகிக்கும் சக்தியிலும் ஸ்திரீகள் புருஷர்களுக்குக் குறைந்தவர்கள் என்று சொல்லுவதற்கில்லை. யுத்தகளத்தில் ஸ்திரீகள் அவர்களுடைய கணவன்களுடனும், சகோதரர்களுடனும் சேர்ந்து சண்டைசெய்திருக்கிறார்கள். தசரத மஹாராஜாவின் மனைவியான கைகேயி ரணகளத்தில் சத்துருக்களுடன் போர்செய்து தன் கணவனுடைய உயிரைக் காப்பாற்றினதாகவும் அதனால் அந்த மன்னன் சந்தோஷமடைந்து தன் தேவியைநோக்கி எனக்கு அளவிலாச் சந்தோஷமாயிருக்கிறது. உனக்கு வேண்டிய இரண்டு வரங்களைக்கேள் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்—என்று சொல்ல, அதற்கிசைந்து சமயம் வந்தகாலத்தில் ராமனை காட்டுக்கு அனுப்பவேண்டுமென்றும் தன் மகன் பரதனுக்கு பட்டம் கட்டிக்கொடுக்கவேண்டு மென்றும் கைகேயி கேட்க, அவ்விரண்டு வரங்களையும் கைகேயி பெற்றதாக ராமாயணததில் வாசித்திருக்கிறோமல்லவா? அஹல்யாபாயும் விக்டோரியா மகாராணியும், போபால் பீகமும் புருஷர்கள் ராஜ்ஜியபாரத்தை நடத்தி வந்ததைதைவிட அதிக சிறப்பாக நடத்திவந்ததை நாம் அறிந்திருக்கிறோமல்லவா. குழந்தைகளைக் காப்பாற்றும் வேலையிலும், சமையல் செய்யும் வேலையிலும் வீட்டுக்காரியங்களை நிர்வகிக்கும் வேலையிலும் ஸ்திரீகள் அமர்ந்து நடத்திவருகிறவர்களாக இருக்கிற படியால், அவர்களுக்கு வெளியேபோய் இதர வேலைகளை நடத்துவதற்கும் சாவகாசம் இல்லாமல் இருக்கிறது. இதனால் அவர்களை புருஷர்களைவிடக் கிழானவர்கள் என்று சொல்லலாமா. தேசம் முன்னுக்கு வருவதற்கான கல்விமுறை எதுவோ அந்த முறைப்படி பெண்களுக்குக் கல்வி கற்பிப்பது நலம். மதாவேசம், சமுகத்தாருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தன் மறுப்பு ஆகிய இவ்வித உத்தமமான குணங்கள் உதிக்கும் படியான படிப்பை பெண்களுக்கு கற்பித்து வரவேண்டும். நல்ல மனைவிகளும் நல்ல தாயார்களும் உற்பத்தியாகும்படியான வழியில் கல்வி கற்பித்து வரவேண்டும் என்பதை இலக்ஷியமாகக் கொள்ளவேண்டும். பெண் கல்வி அபிவிருத்தியடையாமல் தளர்ந்துபோவதற்குக் காரணம், ஸ்திரீ உபாத்திமார்கள் இல்லாததின் குறையேயாகும். இந்த உத்தமமான கைங்கரியத்தின் பொறுப்பை வகிப்பதற்கு, இத்தேசத்தில் லக்ஷக்கணக்கான கைம்பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை உபாத்திமைத் தொழிலுக்கு தயார்ப்படுத்தலாம். புருஷன் இன்னவர் என்று தெரியாத பால்ய கைம்பெண்கள் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இரண்டு வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. மனதை வசப்படுத்திக்கொள்ளும் சக்தியையும், வாழ்நாளை சரியான வழியில் நடத்திவரவேண்டும் என்ற எண்ணத்தையும் உடைய கைம்பெண்கள், தேச ஊழியம் என்ற பெரிய கைங்கரியத்தை விட்டுவிட்டு மறுபடியும் கிரக கிருத்திய சம்பந்தமான வழியை அனுஷ்டிக்கும்படியாக அவர்களை ஏன் கட்டாயப்படுத்தவேண்டும். இந்தியாவில் ஸ்திரீகள், அவர்களுடைய புருஷர்களை இழந்துவிட்டால், அவர்களில் சிலர் இறந்துபோன தங்களுடைய புருஷர்களையே சதாகாலமும் நினைத்துக்கொண்டு வேறு விவாகம் செய்துகொள்ளாமல் இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் ஜன ஊழியத் தொழிலை சிரசாக வகித்து உலகம் முழுவதையும் சொந்த குடும்பமாக பாவித்து காலத்தைக் கழித்து வரலாம். ஸ்திரீகளுக்கு மற்றொரு வழி ஏற்பட்டிருக்கிறது. வைத்திய சாஸ்திரங்களையும் சுகாதார சாஸ்திரங்களையும் கற்று நிபுணர்களாகி டாக்டர்களாக அமர்ந்து பிளேக்கு நோய் முதலிய தொத்து வியாதிகள் தேசத்தில் பரவாமலிருக்கும்படியான உபாயங்களை அனுஷ்டித்து, பறந்தோடிப்போகும்படிச் செய்யும் படியான தேசோபகாரமான கைங்கரியத்தை

ஸ்திரீகள் ஏற்றுக்கொண்டு செய்து வரலாம். இவ்வித கைம்பெண்களுக்கு சநாதன தர்ம சபையாரும், ஆரிய சமாஜத்தாரும் பிரா மோசமாஜத்தாரும் சகாயம் செய்யவேண்டி யது அவசியம். வேறு சில கைம்பெண்கள் கோஷா ஸ்திரீகளுக்கு சட்ட சம்பந்தமான வழிகளில் புத்திமதி சொல்லிவரலாம். வேறு சிலர் தையல் வேலைகளைக் கற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு கற்பித்து வரலாம். வேறு சிலர் இல்லறத்தை வெறுத்து சன்னியாசம் பூண்டு தேசம் தேசமாய்ப்போய் மதவிசாரணை செய்து மதசம்பந்தமான வழிகளை உபதேசி த்து வரலாம். விவாகமாகாத சிறிய பெண் களுக்கு கல்வி கற்பிக்கும் விதத்தைப்பற்றி கொஞ்சம் சொல்லுகிறேன். ஆண்பிள்ளைக்கு, பணத்தைச் சம்பாதிக்கும் வழியை யொட்டிய படிப்பைக் கற்பித்தால், பெண் பிள்ளைகளுக்கு, அப்பணத்தை எப்படிச் செலவுசெய்யவேண் டும் என்பது சம்பந்தமான படிப்பைக் கற்றுக் கொடுக்கவேண்டும். பணத்தைச் சம்பாதிக் கும் விதத்தைக் கற்பித்துக் கொடுக்கும்படிப்பு, ஸ்திரீகளுக்கு வேண்டியதில்லை. பெண்கள் சர்வகலாசாலையைச்சேர்ந்த பட்டப் பரீக்ஷை யில் தேறவேண்டுமென்ற நியமம் இல்லை. பெண்களுக்கு அன்னிய பாஷை கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. ராமாயணம் பார தம்போன்ற கதைகளை அறியாத பெண்களு க்கு ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதில் என்ன பிரயோஜனம்? ஹிந்துப் பெண்களுக்கு கீதை யையும், மகம்மதியப் பெண்களுக்கு கொரானை யும் கற்பித்துக்கொடாமல், சரித்ரம், பூகோ ளம், கணிதம் முதலிய சாஸ்திரங்களைக் கற் பித்துவருவதில் என்ன பிரயோஜனம்? குழந் தைகளைப் பெறும் காரியத்தைத் தவிர, உலகத் திற்குப் பிரயோஜனமான வேறு பல காரியங் களுக்கு உபயோகப்படாமல் இருக்கும்படி யாக பெண்களை வைத்திருப்பதில் என்ன பிர யோஜனம்? பெண்களுக்கு சமையல்தொழில், தையல்வேலை வீட்டுக்காரியங்களில் சிக்கனம் முதலிய விஷயங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். தானியத்தை அரைக்கும் தொழில் கற்றிருந்தால், அத்தொழில் நடத்தினால் அத னால் சகல வியாகூலமும் போய்விடும். உல கத்தில் பரம ஏழைகள் யார் என்றால் இந்தி யர்களைத்தான் குறிப்பிடவேண்டும். மேலும் மேலும் பணத்தைச் சம்பாதிக்கும் மார்க் கத்தை அவர்கள் அறிய விரும்பினால், அப் பணத்தை எப்படிச் செலவு செய்யவேண்டும் என்ற விஷயமாய் ஏற்பட்டிருக்கும் ஞானத் தையும் அடைய விரும்பவேண்டும். வீட்டுக் காரியங்களை நிர்வகித்துவரும் பொறுப்பை வகித்து வருவதோடுகூட வேறு தேசங்களில் நடக்கும் காரியங்களையும் அறிந்துகொள்ளு வதற்கு வேண்டிய சாமர்த்தியத்தை சம்பா தித்துக் கொள்ளவேண்டும். இந்திய கவர்ன் மெண்டைப்பற்றியும் இந்தியச் சட்டத்தைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்திருக்கவேண்டும்.

கன்யா மஹா வித்யாலயத்தைப்பற்றி இரண் டொரு வார்த்தையைச்சொல்லுகிறேன். இந்த மஹா வித்யாலயம் 1886-ம் வருஷத்தில் ஸ்தா பிக்கப்பட்டது. அப்பொழுது அதில் மூன்று பெண்கள் வாசித்து வந்தார்கள். ஒரே ஒரு உபாத்தியாயர் இருந்தார். ஆரிய சமாஜத்தார் அதற்கு மாதம் ஒன்றுக்கு அற்பத் தொகையே பண உதவி செய்துவந்தார்கள்.

1896-ம் வருஷத்தில் அதற்கு கன்யா மஹா வித்யாலயம் என்ற பெயர் இடப்பட்டது. அந்த வித்யாலயத்தில் இங்கிலீஷ் பாடம் இஷ்டபாடமாக கற்பிக்கப்பட்டு வந்தது. ஹிந்திபாஷையின் மூலியமாக எல்லாப் பாடங் களும் கற்பிக்கப்பட்டு வந்தன. ஹிந்து பெண் களுக்கு ஸ்ரீராமர் ஸ்ரீகிருஷ்ணர் இவர்களு டைய ஜீவ்ய சரித்திரம் இன்னதென்றே தெரி யாது. அன்னிய மதத்தினர்களின் கொள்கை கள் கற்பிக்கப்பட்டு வந்தன. இலவச கட்டா யப் படிப்பு முறைகள் இந்தியாவில் பிரஸ்தா பிக்கப்படுவதற்கு முந்தியே இந்த வித்யாலயத் தில் படிப்பு இலவசமாக கற்பிக்கப்பட்டு வந் தது. வித்யாலயத்தில் சம்ஸ்கிருதமும் சங்கீ தம் முதலியவைகள் கற்பிக்கப்பட்டு வந்தன

வித்யாலயத்தை யொட்டி போர்டிங் ஹவுஸூம் கைம்பெண்களின் ஆச்சிரமமும், அனதைக் குழந்தைகளின் ஆச்சிரமமும், ஏற்பட்டிருக்கின்றன. 90-உபாத்தினிமார்கள் இருக்கிறார்கள். அவர்களில் 40-பேர்கள் கைம்பெண்கள் 400-பேர் வித்தியார்த்திகள் இருக்கிறார்கள். சிக்கனமாக ஜீவனம் செய்யும் வழிகள் பெண்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றன. 11 கௌரவ உபாத்திமார்கள் மாதம் ஒன்றுக்கு 10-ரூபாய் சம்பளம் பெற்று வருகிறார்கள். அவர்கள் அதில் 5 ரூபாயைச் சாப்பாட்டுக்காக போர்ட்டிங் ஹவுஸூக்குக் கொடுத்து விடுகிறார்கள். இக்காலேஜ் கூடிய சீக்கிரத்தில் சர்வ கலாசாலையாக உயர்த்தப்படும்.

இந்த மஹா வித்யாலத்திற்கு பொருளுதவி செய்யவேண்டுமென்று உபன்னியாசகர் கேட்டுக்கொண்டார். சந்தாப்பட்டியில் 5000 ரூபாய்க்கு கையொப்பம் இடப்பட்டது.

---

## மாந்தர் லக்ஷியம். The Goal of Man.

" அகங்காரமற்று அவகடமிலாது
அகண்ட னருள் நாடுவதுசமாதி
ஜகமீதிலே அன்புபற்றுமலே பற்றி
பற்றற்றிருப்பது சமாதி
மகத்தான அடியருடன் உறவாடிக் கூடியே
காலங்கழிப்பதும் சமாதி
எக்காலமெவர்பே சினும்
சிறிது மெண்ணுதிருப்பது சமாதி
சுகமொடு இகழான வசனங்கள்
ஒன்றெனக் கொள்வது சமாதி
பகவனே மௌனகுரு நாதனே அடி
யேனுனை நம்பினே
னிதுவேளை நீயருளவே
செய்தற்கரிதான
வேதாந்த நாளுடைய தய்யனே
என்னிரு கண்மணியான குருநாதனே."

## EVENTS OF THE MONTH.
## மாத விசேஷங்கள்.

### ஆனித் திருமஞ்சனம்.

"ஆனித்திருமஞ்சனம் அழுக்காறு நீக்கும்." ஆனிமாசத்திலே ஸ்ரீ நடராஜ மூர்த்திக்குத் திருமஞ்சனம் (அபிஷேகம்) நடப்பது விசேஷம். மார்கழிமீ திருவாதிரையில் தரிசனம் தந்த ஸ்ரீநடராஜ மூர்த்தி பகலெல்லா முழைத்து இரவில் கழுவிக்குளித்து இளைப்பாறும் வேலைக்காரனைப்போல் தேவர்களுக்குப் பகல் காலமாம் உத்தராயணத்தில் தேவர், பக்தர், முனிவர்களுக்கெல்லாம் தரிசனமளித்து நல்லுபதேசம் செய்து தக்ஷிணாயனகால முந்தமுன் "அந்திக்குளி' பொத்த ஆனித்திருமஞ்சன நீராடி அழுக்காறு நீக்கிச் சித்சபையில் புகுந்து நிற்பர் உத்தராயண காலத்தில் உயிர்பெற்று ஓங்கிய ஜீவகோடிகள் தக்ஷிணாயன காலத்தில் ஒடுங்கு நிலைபெற்று உள்ளத்தமர்ந்து தூங்கும். ஆடிமாசத்தில் வியாச பௌர்ணமியன்று தியாகராஜர் வியாசர்க்குச் செய்து காட்டியருளிய திருநடனம் செய்வார். உலகில் பகவான் நடித்துக்காட்டி உலகுய்யப் போதித்தபின் தக்ஷிணாயன காலத்தில் பரித்தியாக தர்மத்தை விளக்கத் தியாகராஜராய் விளங்குவார்.

இதனால் பகலிலுழைத்து இரவில் தூங்கும் ஜீவராசிகள்போல் பகவத் பாதசரணர்களாயிருக்கும் மேலோர் உத்தராயணத்தில் சிருஷ்டி கர்த்தாவின் லீலைகளை விளக்கி, தக்ஷிணாயத்தில் ஸம்ஹார மூர்த்தியும் அவரேயென்னத் தியாகராஜ லீலைசெய்து காட்டுவர். துறவிகள் சாதுர்மாசிய விருதம் அனுஷ்டிக்கத்தொடங்கும் காலமும் இதுவே.

### யுத்த அரங்கங்கள்.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்த அரங்கங்களின் செய்தி இன்னும் சண்டையும் பூசலுமாயிருக்கிறதே யன்றி சமாதானத்துக் காஸ்பதமான சின்னங்கள் ஒன்றையும் காணோம். அமெரிகா யூனைடெட் ஸ்டேட்ஸ் என்னும்

ஐக்கியமாகாணத் தாசாக்ஷியார் இந்த ஐரோப்பிய சண்டையில் புகுந்தபின் ஜெர்மானியர் ஆட்டபாட்டங்கள் கொஞ்சம் அடங்கியிருக்கிறதாகச் சொல்லலாம். ஆனால் ருஷியாவில் தனியரசு செலுத்திவந்த ஏகாதிபத்திய சக்ரவர்த்தியைத் தள்ளித் தூரத்தில் வைத்துவிட்டு அத்தேசத்து மகாஜனங்கள் குடியரசு ஸ்தாபனம் செய்ததில் அத்தேசத்திலுண்டான மாறுதல்கள் சொப்படி வித்தைபோல் திடீரென்று நேர்ந்ததால் அதன் பலாபலனை முற்று முணர்ந்து சொல்லக்கூடியதாயில்லை. இராஜாங்க மாறுதல்களினால் அத்தேசத்தார் யுத்த அரங்கத்தில் செய்முயற்சி சிறிது தளர்ந்தேயிருந்தாலும் அதுவரவர பலப்பட்டு வருகிறது. ஜெர்மானியார் 'ஸப்மரின்' படகுகளைக் கொண்டு நடுக்கடலில் காணும் கப்பல்களைத் துவம்சஞ்செய்து வருகிற உபத்திரவம் எல்லாராலும் மிகுதியாக உணரப்படினும் அவர்கள் செய்யும் இந்தச் சாகஸச் செயல்களுக்கு யாரும் இளைத்துப் போவதாகக் காட்டவில்லை. அமெரிக்கா யூனைடெட் ஸ்டேட்ஸ் அரசாட்சியார் அவர்களுக்கு எதிராகச் சண்டையில்சேர நேர்ந்தது இது காரணத்தினாலேயே. ஜெர்மானியர் கொஞ்சம்கொஞ்சமாய் பின்னுக்கு வாங்கி வந்தாலும் அவர்கள் தோற்றுப் போனதாக எங்கும் காட்டவில்லை. சண்டையில் விட்டுக் கொடுப்பவராகவும் தோற்றவில்லை. விடாமுண்டன் - கொடாமுண்டன் கதையாக இருதரத்தாரும் வைரம் பாய்ந்த உறம்கொண்டு எதிர்த்து மன்றாடிவருகிறார்கள். முடிவு எப்படியாகுமோ பகவானுக்குத்தான் வெளிச்சம். ஆனால் ஒவ்வொருவரும் தமக்கே ஜயம் சித்திக்கிற வரையில் சண்டைபோடுவதை விடுவதில்லையென்று உறம்பேசி முண்டக யுத்தம் செய்து வருகிறார்கள். ஐரோப்பாவில் ஜனஆட்சி மேலெடுக்கவேண்டி இந்த யுத்தம் நடந்துவர, இந்தியாவில் அதே மாதிரி ஜன ஆட்சிமேலெடுக்கவேண்டி ஜனக்கட்டுக்குட்பட்ட துரைத்தனம் ஏற்படவேண்டுமென்று பாடுபடுகிறவர்கள் முயற்சி அநர்த்தமாய் முடிவதாயிருக்கிறது.

### இந்தியா பந்தோபஸ்து சட்டம்.

இந்த யுத்தம் துவங்கினபின் எதிரிகளையும் எதிரிகளுக் கனுகூலமா யிருக்கப்பட்டவர்களையும் கலகம் குழப்பம் இவைகளுக்கு ஆஸ்பத மாயிருக்கப்பட்டவர்களையும் கவர்ன்மெண்டார் விசாரணையின்றியே பிடித்து பந்தோபஸ்தில் வைக்கலாமென்று ஒரு சட்ட முண்டுபண்ணினார்கள். இந்தியாவிற்கு ஜனஆட்சி சித்திக்கவேண்டுமென்று சட்ட விரோதமின்றி யுழைத்துவரக் கங்கணம் கட்டி யுழைத்து வந்தவர்களில் அதிசிரேஷ்டரான அன்னிபெஸண்ட் அம்மாளையும் அவருக்கு உற்றவிடத் துதவியாக விருந்துழைத்து வந்த மிஸ்டர் வாடியா, மிஸ்டர் அரண்டேல் என்பவரையும் அவர்கள் முயற்சி ஜனக்ஷேமத்துக்குப் பங்கமுண்டு பண்ணுவதாயிருக்கிறதென்று சொல்லி கவர்ன்மெண்டார் அவர்களைப் பிடித்து பந்தோபஸ்தில் வைத்து விட்டார்கள். அவர்கள் தற்போது உதகமண்டலத்தில் வசித்து வருகிறார்கள். அவர்களுடைய பந்தேபஸ்துக்காக ஏற்படுத்திய விதிகளைக் கடந்து அவர்கள் நடக்கக்கூடாது. நடந்தால் மூன்று வருஷதண்டனை கிடைக்கும். அவர்கள் மீட்டிங்குகளுக்குப் போகவாவது, பொது சபைகளில் பகிரங்கமாகப் பேசவாவது கூடாது ; ஒதவும் கூடாது. கடிதப் போக்குவரவுகூட போலீஸார் மேன்பார்வையில் தான் நடத்தவேண்டும். அவர்கள் போட்ட புஸ்தகங்கள் எழுதிய துண்டுகளை அனுமதியின்றி விற்பனை செய்யக்கூடாது. இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் நேரிட்டதால் மிஸ்ஸஸ் பெஸண்ட் அம்மாள் நியூ இந்தியா என்கிற பத்திரிகையை நடத்தமுடியாமல் அதை அச்சிட்டுப் பிரசுரிப்பவராக விருந்ததைவிட்டு, அதற்கும் அவருக்கும் சம்பந்தமில்லையென்று மாஜிஸ்திரேட்டுமுன் எழுதிவைத்து விட்டு அவருக்குக் குறிக்கப்பட்ட பந்தோபஸ்து எல்லைக்குள் வசிக்கப்

Roll-126 1263 2504



போய்விட்டார். அந்தப் பத்திரிகையை பம்பாயில்ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்த மாஜி கனம் ஜஸ்டிஸ் டிலாங் அவர்களுடைய புத்திரராகிய மிஸ்டர் பி. கே. டிலாங் என்பவர் விலைக்கு வாங்கி முன்போல் நடத்திவருகிறார். அவர் தீரப் படித்தவர் : நல்ல திறமை வாய்ந்தவர். பெஸண்ட் அம்மாளுடைய சிஷ்யர்களில் பிரதானமான ஒருவர். அவருடைய மேன்பார்வையில் அப்பத்திரிகை இடையில் மூன்றே நாள் நின்றபின் மறுப்படியும் உயிர்பெற்று நடந்துவருகிறது. கவர்ன்மெண்டார் இப்படி அந்த அம்மாளை பந்தோபஸ்தில் வைத்ததால் இந்தியாவில் அங்கங்கே பிரமுகர்களும் ஜனசிரேஷ்டர்களுமாயிருக்கப்பட்டவர்கள் பொதுக்கூட்டம் கூடி கவர்ன்மெண்டார் செய்தது தப்பு என்று கண்டித்துப் பேச கவர்ன்மெண்டார் இதுவரையில் அக்கண்டிப்புக்குக் காது கொடுக்காமல் தானே அவர்கள் கொட்டத்தை அடக்கிவிடப் பார்க்கிறார்கள். இந்தியா மந்திரி, அவர்களுடைய பந்தோபஸ்து நடபடிக்கையை அங்கீகரித்துப் பேசியிருக்கிறார். ஜன சிரேஷ்டர்கள் அதையும் கண்டித்தே பேசிவருகிறார்கள். சென்னையில் டாக்டர் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இது விஷயத்தை ஆரத்தீர யோஜித்து இந்தியாவுக்கு ஜனஆட்சி சுதந்திரம் கிடைகக்வேண்டியது இத்தேச க்ஷேமத்துக்கு இன்றியமையாத அவசியமாயிருப்பதால் அதற்காக வுழைப்பதில் குற்றமொன்றுமில்லையென்று தான் தீர்மானித்திருக்கிறதாக வெளியிட்டிருக்கிறார். அவர்தாமே இதற்குழைக்கும் பொறுப்பை மேலெடுத்துப் போட்டுக்கொண்டும் முன்வந்திருக்கிறார்.

### சென்னை பம்பாய் கவர்னர்கள்.

இராஜப்பிரதிநிதி கவர்னர் ஸ்தானங்களுக்கும் கௌன்ஸில் மெம்பர்கள் வேலைக்கும் நியமிக்கப்படுகிறவர்கள் 5 வ்ருஷகாலவரைக்குள்பட்டு வேலை பார்த்து வருவது வழக்கம். இந்த விதிப்படி சென்னை கவர்னராயிருக்கும் கனம்பொருந்திய லார்ட் பென்ட்லாண்ட் அவர்களும், பம்பாய் கவர்னராகிய லார்ட் உவில்லிங்டன் அவர்களும் அவர்களுடைய 5 வருஷதவணையாகி வேலையை விட்டுப்போகும் காலம் நெருங்கிவிட்டது. யுத்த முடக்கடியால் சீமைக்குப் போக்குவரத்து சாதகம் குன்றி நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருப்பதால் இந்தியா சக்ரவர்த்தியின் அனுமதிபெற்று இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்டின் சாம்பர்லென் அவர்கள் அவ்விருவர்களையும் அவர்கள் தவணை கழிந்தபின்னும் இந்தியாவில் அவர்கள் இப்பொழுதிருக்கும் ஸ்தானத்தில் தானேயிருந்து வேலைபார்த்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள அதற்கு அவர்களிருவரும் உடன்பட்டுவிட்டதாக லண்டன் கெஜட்டில் பிரசுரமாகியிருக்கிறது. இந்தியாவிலும் அது விஷயம் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

### சீமைக் கோர்ட்டுகளில் இந்தியா வழக்குகள்.

சென்னை ஹைகோர்ட்டில் "நியூ இந்தியா ஸெகியூரிடி" கேஸ் விசாரணையான விஷயத்தைப்பற்றியும் மாஜிஸ்திரேட்டு அப்பத்திரிகையிடமிருந்து இரண்டாந்தரம் செகியூரிடி கேட்டதைப்பற்றியும் ப்ரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ள அனுமதி கேட்டதற்கு இணங்கி அக்கோர்ட்டார் அனுமதி கொடுத்து உத்தரவு பிரப்பித்திருக்கிறார்கள்.

இது சம்பந்தமாய் சீமையில் நடக்கும் இன்னொரு கேஸும் கவனிககத்தக்கது. அது தான் திலகர் வாதியாகவும் சிரோல் பிரதிவாதியாகவும் ஏற்பட்டு இங்கிலீஷ் ஹைகோர்ட்டில் விசாரணையாகிவரும் கேஸ். அது விஷயமாய் கனம் மிஸ்டர் பாப்டிஸ்டா அக்கேஸை நடத்தவென்று சீமைக்குப் போகிறார். அவரைப் பற்றிப் பத்திரிகைகளில் பின்வரும் சமாசாரம் வெளியாகி யிருக்கின்றது.

"இங்கிலாந்தில் ஸர் வாலண்டைன் சிரோலின் மீது ஸ்ரீமான் திலகர் தொடுத்த கேஸின் சம்பந்தமாக பாரிஸ்டர் கனம் ஜோஸப் பாப்டிஸ்டா இங்கிலாந்து செல்லப்போகிறார். பந்தோபஸ்தில் வைக்கப்பட்ட அரண்டேலின்

சார்பாக பிரிவி கௌன்ஸிலின் முன்பு செய்திருக்கும் கேஸின் விஷயமாகவும் அவர் செல்லுகிறார். சென்னையிலிருந்து மிஸ்டர் இ. லக்ஷ்மண ஐயரும் அவருடன் செல்லுவார். இப்படிப் போகும் பாரிஸ்டர் மிஸ்டர் ஜோஸப் பாப்டிஸ்டாவுக்கு ஜுலைமீ 10உ இரவு பம்பாயில் ஒரு உபசார விருந்து செய்யப்பட்டது. மிஸ்டர் பாப்டிஸ்டா தம்முடைய தொழில் முறையில் மேற்சொன்ன கேஸ்களை நடத்துவதுடன் இந்தியாவின் நிலைமையைப் பற்றிப் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு அறிவிக்கும் ராஜீய வேலைகளையும் இங்கிலாந்தில் செய்வார்.''

சென்னையில் குழாய்த்தண்ணிர் கஷ்டம்.

சென்னமா நகரில் ஜனங்கள் சௌகரியத்துக்காகப் புழலேரியிலிருந்து குடி தண்ணீர் வாய்க்கால் வழியாகவும் குழாய்கள் வழியாகவும் தெருக்களிலும் வீடுகளிலும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிற விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே. சில வருஷங்களுக்கு முன் இந்தத் தண்ணீர் 'சப்ளை' செய்கிற முறையைச் சீர்திருத்தி நல்ல சுத்தமான தண்ணீர் வடிக்கட்டினதாக எப்போதும் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று பல வருஷங்களாய் வேலைசெய்து வந்தார்கள். அவ்வேலை முடிந்து இரண்டொரு வருஷத்துக்கு முன்தான் வடிக்கட்டின தண்ணீர் குழாய்கள் மூலமாக எங்கும் வரத்தலைப்பட்டது. இப்பொழுது வடிக்கட்டும் யந்திரங்கள் மூன்று இருந்து வேலை செய்கின்றன. இவைகளில் ஒன்று ரிபேர் செய்யவேண்டியதாக ஏற்பட மற்ற இரண்டு இஞ்ஜின்களால் நகரத்துக்கு வேண்டிய தண்ணீர் வடிக்கட்டி யிறைக்க முடியாமற்போய் ஜனங்கள் குடி தண்ணீர் இன்றிக் கஷ்டப்பட்டார்கள். ஜுலைமீ 1உ முதல் நல்ல ஜலம் காலையிலும் மாலையிலும் மட்டும் விட்டு வரவும் மற்றக் காலங்களில் நிறுத்தி வைக்கவும் ஏற்பாடு செய்து பார்த்தார்கள். இந்த ஏற்பாட்டினல் ஜலம் பூராவாகச் சில விடங்களுக்கு வாராமல் நின்றுபோனதோடு மற்ற இடங்களுக்கும் சரியாகக் குடி தண்ணீர் கிடைக்காமல் ஜனங்கள் மிக்க கஷ்டப்பட்டார்கள். இதனல் புகார் உண்டாகி அதிகரிக்க, கார்பொரேஷன் அதிகாரிகள் இப்பொழுது வடிக்கட்டின தண்ணீர் அழுக்குத் தண்ணீர் எல்லாமாகக் கலந்து எப்போதும்போல குழாயில் ஜலம் விட்டுவரத் தீர்மானித்திருக்கிறார்கள். இதைப் பற்றிச் சுதேசமித்திரன் பத்திரிகையில் பின் வருகிறபடி எழுதியிருப்பது எல்லாரும் கவனிக்கத் தக்கதா யிருக்கிறது:—"அழுக்குத் தண்ணீர் எப்பொழுதும் வரும்:—சில மணிநேரம் நிறுத்தியும், வடிக்கட்டின ஜலத்தை போதுமான வரையில் விட முடியவில்லை யாகையால், இனி வடிக்கட்டின ஜலமும் வடிக்கட்டாத ஜலமும் கலந்து எப்பொழுதும் விடப்படும் என்று கார்பொரேஷன் பிரஸிடெண்டு அறிவிக்கிறார். இது ஏற்கெனவே நடந்து வந்த காரியம். வடிக்கட்டாத ஜலத்தின் உபயோகத்தால், மரணம் ஜாஸ்தியாய் விடுகிறதென்று ஹெல்த் ஆபிஸர் முறையிட்டார். அதன்மேல் சிறிதுநேரம் நிறுத்தி வடிக்கட்டின ஜலத்தையே விடப் பார்த்தார்கள்; முடியவில்லை யென்று பழைய வழக்கத்தை மறுபடி கைக்கொள்ளப்போகிறார்கள். ஹெல்த் ஆபிஸர் சொல்வது உண்மையானல், இதன்பலனக மரணம் அதிகமாகும்; முனிஸிபல் அதிகாரிகளின் திறமை யின்மையைக் காட்ட வேறெதுவும் தேவையில்லை. ஜலத்தைக் காய்ச்சிக் குடிக்கவேண்டுமென்று பிரஸிடெண்டு எச்சரிக்கை செய்கிறார். காய்ச்சிக் குடிக்கும் பிரயோஜனத்தை அறியும்படியான படிப்பு பாமர ஜனங்களுக்கிருக்கிறதா? அவர்களை முட்டாள்களாக நாம் வைத்து விட்டு, சமயம் வந்தபோது சாஸ்திர ஞானத்தை அவர்களிடம் எதிர்பார்க்கிறோம். இன்னும் சில வடிக்கட்டிகளைக் கட்ட வேண்டியதுதான் இதற்கு வழி. ஆனல் பணமில்லை."

இந்தியா மந்திரி ராஜினாமா.

இந்தியா மந்திரியாயிருந்த மிஸ்டர் ஆஸ்டின் சாம்பர்லேன் மெஸபொடோமியா கமிஷன் ரிபோர்ட்டில் குற்றஞ் சாட்டப் பெற்றவர்களில் ஒருவர்போலும் அவர் தம் வேலையை இராஜிநாமா கொடுத்துவிட்டார்.

## EXTRACT: PATNA UNIVERSITY BILL.

### பாட்னா யூனிவர்ஸிடி மசோதா.

பாடலிபுர மென்று பூர்வந்தொட்டுப் பேர் போன பாட்னா நகரில் புதிதாய் ஏற்பட்ட பிஹார்-ஒரிஸ்ஸா மாகாணத்துக்குரியதாக ஒரு யூனிவர்ஸிடி யேற்படுத்தப் போகிறார்கள். அதைப்பற்றிய மசோதா ஒன்று சிலகால முன் வெளியாகிப் பின்னர் ஜனவாக்குக் கிசைந்த தாக வில்லையென்று அதை ஒருவாறு சீர்திருத்த முயன்றார்கள். அப்படி சீர்திருத்தப்பெற்ற மசோதாவானது இந்தியாசட்ட நிரூபணசபையார் நியமித்த ஸெலெக்ட் கமிட்டியார் ஆலோசனை பெற்று அவர்களுடைய ரிபோர்ட்டுடன் இப்பொழுது வெளியாகி யிருக்கிறது. இதைப் பற்றிச் சுதேசமித்திரன் பத்திரிகை பின்வருமாறு பொதுஜன அபிப்பிராயத்தை வெளியிட்டுப்பேசி யெழுதியிருக்கிறது. இப்பொழுது "யூனிவர்ஸிடி ரிபார்ம்" என்று யூனிவர்ஸிடிகளைச் சீர்திருத்த வேண்டுமென்கிற எண்ணம் எங்கும் அதிகமாய்ப் பரவி வருகிறபடியால், இது விஷயத்தில் அதிகாரிகள் நோக்கும் ஜனங்கள் நோக்கும் எப்படியிருக்கிற தென்று ணர்ந்துகொள்ள இம் மசோதாவைப் பற்றியுள்ள அபிப்பிராய பேதங்கள் தெரிந்து கொள்ளத்தக்கவையாக விருப்பதால் அதைக் கீழே யெடுத்துப் பிரசுரிக்கிறோம்:—

"பிஹார்-ஒரிஸ்ஸா என்ற மாகாணங்களுக்குத் தனியாக ஒரு யூனிவர்ஸிடியை ஏற்படுத்தக் கருதி, இந்தியா கவர்ன்மெண்டார் சில மாதங்களுக்குமுன் ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தனர். யூனிவர்ஸிட்டிகள் நாடெங்கும் ஏற்பட வேண்டுமென்று ஆசைப்பட்டிருந்தவர்களும் அந்த மசோதாவைப் பார்த்ததும், அம்மாதிரி யூனிவர்ஸிட்டி ஒன்று ஏற்படுவதை விட ஏற்படாமலிருப்பதே நலமென்று கருதினார்கள். அந்த மசோதாவின்படி ஏற்படக்கூடிய யூனிவர்ஸிட்டியானது விநோதமானதாயிருக்கக் கூடியதாயிருந்தது. உலகிலுள்ள யூனிவர்ஸிடிகள் இருவகைப்படும்; சென்னையைப் போல சில யூனிவர்ஸிட்டிகள் பரீட்சையை மாத்திரம் நடத்தி பட்டம் கொடுக்கின்றன. அவைகளைச் சேர்ந்த காலேஜ்கள் அவைகளின் அதிகார எல்லைக்குள் எங்கு மேற்படலாம். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் முதலிய இடங்களிலிருப்பவை போன்ற யூனிவர்ஸிடிகள் கல்வியைத் தாங்களே போதிக்கின்றன. ஆனால் மசோதாவின்படி பாட்னாவில் யூனிவர்ஸிடி ஏற்பட்டதானால், அது மேற்சொன்ன இரண்டு வகை யூனிவர்ஸிட்டிகளில் ஒன்றைப் போலிராமல் இரண்டையும் போல் இருக்கப் பார்க்கும். பாட்னா என்று சொல்லப்படும் பாடலிபுரத்தில் இரண்டு காலேஜ்கள் இருக்கின்றன. அவைகளே யூனிவர்ஸிடி காலேஜ்கள் ஆகும். வெளி ஜில்லாக்களில் இருக்கும் காலேஜ்களில் ஐந்தும் அங்கீகரிக்கப்படும். இவைகள் அன்னியில் வேறு காலேஜ்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் அவை பாட்னாவில் ஏற்படப் போகிற ஸினேட் சபையின் கட்டடத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் ஏற்படவேண்டும். இல்லாத இடங்களில் காலேஜ்களை வைக்க யாரேனும் முன் வருவார்கள். ஏற்கெனவே இரண்டு காலேஜ்கள் இருக்குமிடத்தில் மறுபடியும் காலேஜ் வைக்க எவர் முன் வருவர்? ஆகையால் ஆரம்பத்தில், அங்கீகரிக்கப்படும் ஏழு காலேஜ்களுக்கு அதிகமாக எப்பொழுதும் காலேஜ்கள் ஏற்பட முடியாது. இந்த நிலைமையில் உயர்தரக் கல்வி நாடெங்கும் பரவ வழி எப்படி யேற்படும்? இது மசோதாவில் ஒரு குறை. அம்மாகாண லெப்டினெண்டு கவர்னர் யூனிவர்ஸிடியின் வைஸ்-சான்ஸலராயிருப்பார். எந்த விஷயத்தையும்பற்றி அவர் சுயமாக விசாரணைசெய்து, உத்தரவு செய்யலாம். அவருடைய உத்தரவு ஸிண்டிகேட் ஸினேட் என்ற எல்லா அதிகார ஸ்தானங்களையும் கட்டுப்படுத்தும். மசோதாவில் இது ஒரு குறை. வைஸ் சான்ஸலர் மற்ற யூனிவர்ஸிட்டிகளில் கௌரவ அதிகாரியாயிருக்கிறார். பாட்னா யூனிவர்ஸிடியில் அவருக்கு சம்பளமுண்டு. பாட்னாவிலுள்ள இரண்டு காலேஜ்களையும் மேற்பார்வை செய்யும் வேலை அவருடையது. மற்ற ஐந்து காலேஜ்களையும் ஸிண்டிகேட் மேற்பார்வை யிடலாம். ஆகையால் யூனிவர்ஸிடியைச் சேர்ந்த எந்தக் காலேஜையும் மேற்பார்வை செய்யும் அதிகாரம் யூனிவர்ஸிடிக்கு இருக்கவேண்டியது நியாயமாயிருக்க, கவர்ன்மெண்டினால் நியமிக்கப்பட்டு கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்தை அனுசரித்து நடக்கக்கூடிய வைஸ் சான்ஸலருக்கு அது போய்விடும். இது ஒருகுறை. ஸிண்டிகேட் சபையில் மசோதாவின்படி உத்தியோகஸ்தர்

களே அதிகமாக இடம் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களும் கவர்ன்மெண்டை அனுசரித்து நடக்கக் கூடியவர்களாகவே இருப்பார்கள். இது ஒரு முக்கியமான குறை. ஸினேட் சபையானது பேருக்குமாத்திரம் அமைக்கப்படுமேயல்லாமல், அதற்கு ஒரு அதிகாரமும் இராது. அது யோசனை செய்து விதிகள் நிபந்தனைகளை ஏற்படுத்தலாம். ஆனால் அவ்விதிகள் நிபந்தனைகளை ஸிண்டிகேட் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும்படி செய்ய ஸினேட்டுக்கு அதிகாரமில்லை. ஆகையால் ஸினேட் இல்லாமலேயிருந்தாலும் பாதகமில்லை. இந்த மசோதாவின்படி ஏற்படும் யூனிவர்ஸிட்டியானது சர்க்கார் இலாக்காவாக இருக்குமேயல்லாமல், சுவாதீனமுள்ள யூனிவர்ஸிடியாகமாட்டாது. ஆகையால் இந்த யூனிவர்ஸிடி தேவையில்லை என்ற அபிப்பிராயம் நாடெங்கும் பரவிவிடவே, தாங்கள் அதிக உயரத்தில் பறந்துபோய் விட்டதாக கவர்ன்மெண்டார் உணர்ந்து சிறிது கீழே வர உத்தேசித்தார்கள். சென்ற பிப்ரவரி மாதம் 7-ந்தேதியன்று நடந்த ராஜப்பிரதிநிதியின் சட்ட சபை மீட்டிங்கில், ஸர் சங்கரன் நாயர் மேற்சொன்ன குறைகளையெல்லாம் ஒப்புக்கொண்டு அவைகளைத் திருத்த கவர்ன்மெண்டார் இஷ்டப் படுகிறதாகச் சொல்லி, மசோத வைப்பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அந்தக் கமிட்டி ஆலோசனை செய்து மசோதாவில் சில திருத்தங்களைச் செய்து முடித்துவிட்டதாகவும், முக்கியமான திருத்தங்கள் இன்னவென்றும் 9-ந்தேதி வந்த தந்தியை நமதுநேயர்கள் கவனித்திருப்பார்கள். கமிட்டியின் பதினொரு மெம்பர்களும் ஏகோபித்து ரிபோர்ட் செய்திருப்பதால், கவர்ன்மெண்டு கட்சி மெம்பர்களும் பொது ஜனக் கட்சி மெம்பர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ராஜியாய்ப் போயிருப்பதாகத் தெரிகிறது. பாட்னாநகருக்கு வெளியில் 5 காலேஜ்களையே அங்கிகரிக்க உத்தேசித்த மசோதா இப்பொழுது 6 காலேஜ்களை அங்கிகரிக்கும். சான்ஸலருடைய அதிகாரத்திலும் திருத்தம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் திருத்தப்பட்டபடி மசோதா இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை யாகையால், விவரம் தெரியவில்லை. வைஸ் - சான்ஸலர் 5 வருஷ காலம் உத்தியோகத்திலிருக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக மூன்று வருஷமிருக்கும்படி மசோதா திருத்தப்பட்டிருக்கிறது. ஸினேட்டில் 40 முதல் 60 மெம்பர்கள் இருக்கலாமென்று ஏற்பட்டிருந்ததற்குப் பதிலாக 60 முதல் 75 மெம்பர்கள் இருக்கலாமென்று திருத்தப்பட்டிருக்கிறது. அவர்களில் 50 மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டும். ஆகையால் யூனிவர்ஸிடியில் பட்டதாரிகளின் செல்வாக்கு அதிகமாக ஏற்பட இடமுண்டாகும். யூனிவர்ஸிடியின் காரியங்களையெல்லாம் நிர்வகிப்பதும் மேல்பார்வை பார்ப்பதும் ஸினேட்டினுடைய அதிகாரங்களாகும். ஆயினும் சில விஷயங்களைப்பற்றின வரையில் ஸிண்டிகேட் சபையானது தானாக நடந்து விடலாம் என்றிருப்பது விரும்பத்தக்கதல்ல. ஸிண்டிகேட் மெம்பர்களில் 5 பெயர்கள் அச்சபை செய்த ஒரு காரியத்தை ஸினேட் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டால், ஸினேட் பரிசீலனை செய்யலாமென்றிருந்தாலும், ஸினேட்டின் நிர்வாகசபையாகிய ஸிண்டிகேட் தானாக சில விஷயங்களை நடத்திவிடலாமென்பது அவ்விரு சபைகளுக்குமுள்ள சம்பந்தத்துக்கு ஒத்திருக்கவில்லை. ஸிண்டிகேட்டுக்கு இன்ன அதிகாரமிருக்க வேண்டுமென்றும் ஸினேட்டுக்கு இன்ன அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் தீர்மானிப்பது கமிட்டி மெம்பர்களின் அபிப்பிராய பேதத்தால் கஷ்டமாயிருந்ததென்று ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருப்பதால், ஸினேட்டுக்கு சிறிது யோக்கியதை உண்டுபண்ணுவது வெகு சிரமமாயிருந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த மசோதாவை கமிட்டியிலிருந்த ஜனப்பிரதிநிதிகள் பலர் அங்கீகரித்து விட்டபடியால், அது சீக்கிரம் சட்டமாய் விடும், அந்த சட்டத்தை அனுசரித்து ஏற்படும் யூனிவர்ஸிட்டியானது தேசத்தின் தேவைக்குத் தகுந்தாற்போல் நாளுக்குநாள் விசாலமாகக்கூடாததாயிருக்கும். அதன் சான்ஸலர் சர்வாதிகாரமுள்ளவராயிருப்பார். வைஸ் சான்ஸலர் கல்வி இலாக்காத்தலைவர் போலாய்விடுவார். ஸிண்டிகேட் ஸினேட்டைவிட அதிக அதிகாரமுள்ளதாயிருக்கும். பாட்னா யூனிவர்ஸிட்டியைப் போல் இனி ஏற்படப்போகிற புது யூனிவர்ஸிடிகள் அமையக்கூடாது என்று கனம் பூபேந்தரநாதவாஸுவும் கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.